Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 15 சனிக்கிழமை (29-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:123



புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினருடன் தலைவர் வே.பிரபாகரன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், அடேல் பாலசிங்கம்.

### சமஷ்டி முறை குறித்து ஆராய

## புலிகளின் அரசியல் விவகாரக் குழு இன்று வெளிநாடு புறப்படுகிறது

கிளிநொச்சி,மார்ச்29

மேற்கு நாடுகளில் நடைமுறையில உள்ள சமஷ்டி ஆட்சிமுறை, ஆட்சி அதிகார நடைமுறை என்பவை தொடர்பான சட்ட நிலைகள் பற்றி அறிந்துகொள்வதற்கான வெளிநாட்டு ஆய்வுச் சுற்றுலாவை விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு இன்று ஆரம்பிக்கின்றது.

கிளிநொச்சியில் இருந்து குழுவின் 16 உறுப்பினர்கள் இன்று கொழும்புக்குச் சென்று இன்று நள்ளிரவு வெளிநாடு புறப்படுவர்.

நோர்வே, சுவிஸ், கனடா, ஜேர்மனி, லண்டன் ஆகிய நாடுகளிலிருந்து தெரிவாகியுள்ள ஐந்து உறுப்பினர்கள் பின்னர் இவர்களுடன் இணைந்து கொள்வர்.

மொத்தம் 21 பேர் கொண்ட இக்குழு நோர்வே, சுவீடன், பின்லாந்து டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாடுகளில் நடைமுறையிலுள்ள சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஆராயும்.

நான்கு நாடுகளின் ஆய்வுச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு இக்குழு அடுத்தமாதம் 12 ஆம் திகதி இலங்கை திரும்பும். அதன் பின்னர் விரிவான அறிக்கை ஒன்றை குழு, விடுதலைப் புலிகளின் தலைமையிடம் கையளிக்கும்.

மாதஆரம்பத்தில் இக்குழுவின் உறுப்பினர்களை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்தித்து, ஆலோசனைகள் வழங்கியிருந்தார். (14 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்கா புதிதாக 1,20,000 துருப்புக்களைக் குவிப்பு

# தலைநகர் பக்தாத்துக்குள் நுழைந்தால் பெரும் உயிர் இடிப்பு; ஈராக் எச்சரிக்கை

## முஸ்லிம்களின் புனித நாளான நேற்றும் குண்டுவீச்சுத் தாக்குதல் தொடர்ந்தது

லண்டன்,மார்ச்29

**அமெரிக்கா புதிதாக 1,20,000 துருப்புக்களை ஈராக்கில் குவிக்கிறது. தலைநகர் பக்தாத்துக்குள் துருப்புக்கள் நுழைந்தால் பெரும் உயிரிழப்பு ஏற்படும் என்று ஈராக் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.**

**இன்னும் ஒரு வாரத்துக்குள் பக்தாத் சுற்றி வளைக்கப்படும் என்று ஹேஷ்யம் கூறப்படுகிறது. எந்த ஒரு தாக்குதலுக்கும் முகம்கொடுக்கத் தயார் என்று ஈராக் பாதுகாப்பு அமைச்சர் சுல்தான் ஹசீம் ஹமட் சூளுரைத்திருக்கிறார்.**

ஈராக் பாதுகாப்பு அமைச்சர் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திய போது தொடர்ந்து சண்டையிடுவோம் என்றார்.

"எதிர்வரும் நாள்களில் ஊடுருவல் காரர்கள் பக்தாத்தை சுற்றிவளைக்க முடியும் ஆயினும், தலைநகரைக் கைப் பற்ற அவர்கள் வீதிக்கு, வீதி போரிட வேண்டி வரும்.

"பக்தாத்தில் நாம் எமது பிரதான பாதுகாப்பு நிலைகளை அமைத்திருக் (14 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் தளம் அமைக்கும் பணியில் படையினர் தொடர்ந்து மும்முரம்

யாழ். மாநகர சபைக் கட்டட வளாகப் பகுதியில் படை முகாம் அமைப்பது தொடர்பான சர்ச்சை மேலும் வலுத்துள்ள நிலையில் முகாம் அமைப்பதற்கான தீவிர முன்னேற்பாட்டுப் பணியில் படையினர் நேற்றும் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக்காலைமுதல் சிப்பாய்கள் முகாம் அமைப்பதற்கான பூர்வாங்கப பணிகளை மேற்கொள்வதில் தீவிரமாகவும் மும்முரமாகவும் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

அப்பகுதியில் முன்னர் காணப்பட்ட பாரிய இரும்புக் கேடர்களை கனரக வாகனங்களின் உதவியுடன் படையினர் நேற்று அப்புறப்படுத்தினர். அத்துடன் முகாம் அமைக்கப்படவுள்ள பகுதியைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கான முட்கம்பிச் சுருள்களும் அப்பகுதியில் வாகனமூலம் கொண்டு வந்து இறக்கப்பட்டன.(ஐ-8)

## புதிய முகாம் அமைப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்

கொழும்பு,மார்ச்29

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சுபாஷ், ஞானம்ஸ் ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும 80 வீடுகள் ஆகியவற்றை உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வசதியாகவே யாழ். கோட்டைப் பகுதியில் முகாம் ஒன்றை தற்காலிகமாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் இடத்தில புதிய முகாம் அமைப்பது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி, முதலில பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயும் உள்ளேயும் உள்ள பொதுமக்களின் கட்டடங்கள், காணிகளை அவர்களிடம் கையளிக்கவேண்டியுள்ளது.

குடாநாட்டின் பாதுகாப்பு பாதிக்காத வகையில் முகாம்களை மாற்றியமைக்க பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். 152 (14 ஆம் பக்கம் பார்க்க)

### ஈராக்கில் 50 பொதுமக்கள் உயிரிழப்பு!

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தின் சந்தைக் கட்டடம் ஒன்றின் மீது நேற்று அமெரிக்காவின் குரூஸ் ஏவுகணை விழுந்து வெடித்ததில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூளா குடியிருப்புப் பகுதியிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இடிபாடுகளுக்கிடையே மேலும் பலர் சிக்கியுள்ளதை உள்ளூர் தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பியது. இரு தினங்களுக்கு முன்னர் வர்த்தகக் கட்டடம் ஒன்று குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகியதில் 14 பேர் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

### கொழும்பில் நேற்று நடந்த

## அமெ. எதிர்ப்புப் பேரணி மீது கண்ணீர்புகைக்குண்டு வீச்சு

கொழும்பு,மார்ச்29

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்திருப்பதைக்கண்டித்து கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவிப் பொலீஸார் கலைத்தனர்.

கொழும்ப நகர மண்டபத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான பேரணியில் சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஜே.வி.பி. ஆதரவாளர்களும் இப பேரணியில் பங்கேற்றனர். அமெரிக்காவுக்கு எதிரான சுலோக அட்டை (14 ஆம் பக்கம் பார்க்க)

### கச்சாய் வீதியில் சென்றபோது

## புலிப் போராளி ஒருவர் நேற்று பொலீஸாரால் தாக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம்,மார்ச்29

கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் போராளியான இசையாணன் என்பவர் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து கச்சாய் வீதி வழியாக அரசியல் பணி மேற்கொண்டு (14 ஆம் பக்கம் பார்க்க)

## பிடியாணையின்கீழ் இருப்பவர்களை உடனடியாக கைது செய்ய பணிப்பு

கொழும்பு,மார்ச்29

நாடு முழுவதிலும் விசேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, பிடியாணையின்கீழ் இருப்போரை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜா சகல பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு கைதானோர் பற்றிய அறிக்கையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு (14 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவுக்கு நீங்கியது

அரியாலை,மார்ச்29

ஈராக்கில் போர் மூண்டதை அடுத்து கடந்த சில தினங்களாக யாழ். குடாநாட்டில் எரிபொருளுக்கு நிலவிவந்த பற்றாக்குறை மற்றும் தட்டுப்பாடு தற்போது ஓரளவு நீங்கிவிட்டது.

எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் போதியளவு டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்கள் விநி (14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வன்னியில் மக்களுக்கான திட்டங்களுக்கு ஐ.நா. அமைப்புக்கள் உதவியளிக்க உறுதி

## புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுடன் பேச்சு

வவுனியா,மார்ச்29

ஐ.நா. அகதிகளுக்கான தூதுவராலயம், ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுநடத்தினர்.

புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி, திட்டப் பணிப்பாளர் லோரன்ஸ் கிரிஸ்டி, ஆஸ்திரேலிய புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த நரேன் ஆகியோர் வன்னியில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற, மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள் மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக எடுத்துக்கூறினர்.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வுப் பணிகள் போன்ற அவசரத் தேவைகளுக்கான உதவித்திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் எனப் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். ஐ.நா. உயர் மட்டக்குழுவினர் அத்திட்டங்களுக்குத் தாம் உதவுவதாக உறுதியளித்துள்ளனர். (ஐ)




**சமாதான சைக்கிள் சுற்றுலாவினை மேற்கொண்டு இலங்கை முழுவதும் சைக்கிளில் சுற்றும் ஆர். ராஜரட்ணசிங்கம் குணசேகர தனது பயணத்தின் ஒரு கட்டமாக நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.**

**அவருடன் "நாட்டைச் சுற்றிச் செல்லும் சமாதானச் சைக்கிள் சுற்றுலாவிற்கு சமாதானத்திற்காக அனைவரையும் அழைக்கின்றோம்" என்னும் வாசகம் தாங்கிய ஊர்தியொன்றும் வந்திருந்தது. அவர் கிளிநொச்சியில் இருந்து நேற்று ஏ-9 வீதி ஊடாக யாழ்ப்பாணம் வந்து உடனடியாகவே தென்பகுதி நோக்கித் திரும்பிச் சென்றார்.**

**சைக்கிளுடன் ராஜரட்ணசிங்கத்தைப் படத்தில் காணலாம். சுலோகம் தாங்கிய வாகனமும் காணப்படுகிறது.** *(படம்: பத்மராஜ்)*

# மூன்றுமாத காலப் பகுதியினுள் வீதி விபத்துக்கள் காரணமாக 6பேர் பலி; 400பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்29

குடாநாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் காரணமாக கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 400 பேர் படுகாயமடைந் துள்ளனர் என்றும் -

6பேர் உயிரிழந்தும் உள்ளனர் என்றும் யாழ்.ஆஸ்பத்திரியில் இயங்கும் - பொலீஸ் அலுவலகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

யாழ்போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருகை தந்தவர்களின் எண்ணிக்கை மட்டுமே இது என்றும் - ஏனைய வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல் மற்றும் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பிரயாணம் செய்தல் மற்றும் வீதி ஒழுங்கு களைக் கடைப்பிடிக்காமையே இவ்வாறான விபத்துக்களுக்குக் காரணம் என்றும்- கூறப்பட்டது. (எ-180)

# நாட்டின் பல நகரங்களிலும் நேற்று ஆர்ப்பாட்டம் அமெ. - பிரி. கொடிகள், கொடும்பாவிகள் எரிப்பு!

கொழும்பு,மார்ச்29

அமெரிக்காவின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் ஈராக் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் ஈராக் போரில் வெற்றிபெற வேண்டுமெனக் கோரியும் கொழும்பில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் மாபெரும் துஆ பிரார்த்தனை ஒன்றை நேற்று நடத்தினர்.

ஜும் ஆ தொழுகையின் பின்னர் முஸ்லிம்கள் கடைகளைப் பூட்டிவிட்டு மாளிகாவத்தை சிறிசேன குரே மைதானத்தில் பெரும்தொகையாகக் கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

புறக்கோட்டை, மருதானை ஆகிய இடங்களில் முஸ்லிம்களின் கடைகள் காலையிலிருந்தே மூடப்பட்டிருந்தன. கொழும்பிலுள்ள பள்ளிவாசல்களில் ஈராக்கில் யுத்தத்தால் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்காக குணூத் ஓதப்பட்டது.

சகல பள்ளிவாசல்களிலும் நடைபெற்ற ஜும் ஆ பிரசங்கங்களில் ஈராக் மக்களுக்காக பிரார்த்திக்கும் படியும், அமெரிக்கப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஈராக் மீது அமெரிக்கா "தொடுத்துள்ள கண்மூடித்தனமான" தாக்குதலைக் கண்டித்து நேற்று ஜும் ஆ தொழுகையின் பின்னர் பாரிய ஆர்ப்பாட்டமும், கண்டனப் பேரணியும் புத்தளம் நகரில் இடம்பெற்றன.

ஈராக் - இலங்கை நட்புறவுச் சங்கத்தின் புத்தளம் கிளை இதை ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்திலும், பேரணியிலும் கலந்துகொண்டனர்.

நகரிலுள்ள நான்கு ஜும் ஆ பள்ளிவாசல்களிலும் இருந்து ஜும் ஆ தொழுகையை முடித்துக் கொண்ட மக்கள் நகரவதிகளில் பதாகைகளை தாங்கிய வண்ணம் ஊர்வலமாக வந்தனர்.

பின்னர் நகர மத்தியில் உள்ள 1400 ஆம் ஆண்டு ஞாபகார்த்த ஸ்தூபிக்கு அருகில் கூட்டம் இடம்பெற்றது. புத்தளம் பௌத்த மத்திய நிலையத்தின் ஏ.ரக்கித்த தேரர் மற்றும் புத்தளம் லூர்து மாதா ஆலய அருட்தந்தை எ.லெம்பர்ட் புத்தளம் காஸிமிய்யா அரபுக்கல்லூரி விரிவுரையாளர் எச்.எம். மின்ஹாஜ் ஆகியோர் உரையாற்றினார்கள்.

வடக்கு உலமாக்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் எஸ்.எச்.எம்.முபாரக் விசேட துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க - பிரிட்டிஷ் தேசிய கொடிகளையும், ஜோர்ஜ் புஷ், பிளேயர் ஆகியோரின் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

இதேவேளை, சம்மாந்துறையிலும் நேற்று மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு உணர்வு பூர்வமாகப் பேரணி நடத்தி ஈராக் மீது அமெரிக்கா - பிரிட்டன் போர் தொடுத்திருப்பதை வன்மையாகக் கண்டித்தனர்.

"இலங்கை அரசாங்கம் ஈராக் யுத்தம் தொடர்பான மக்களின் உணர்வுகளை மதித்து அமெரிக்காவுக்கான எதிர்ப்பை, உடனடியாக நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றி வெளிக்காட்டவேண்டும்." என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையும், பொதுநல இயக்கங்களின் ஒன்றியமும் இணைந்து, ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தத்தை கண்டித்து சம்மாந்துறை ஹிஜ்றா சந்தியில் நடத்திய மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சர்வதேச பயங்கரவாதி என்றும், நவீனகால ஹிட்லர் என்றும் இக்கூட்டத்தில் பகிரங்கமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இக்கண்டனப் பேரணிகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (ஐ)

# மணல் அள்ளச் சென்றவர் மிதிவெடியால் காலிழந்தார்!

## அரியாலையில் சம்பவம்

வலி.வடக்கு,மார்ச்29

அரியாலைப் பகுதியில் நள்ளிரவு நேரம் மணல் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் நபர் மிதிவெடியில் சிக்கியதில் அவரது ஒருகால் துண்டிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2.00 மணிக்கு அரியாலை முள்ளிப் பகுதியில் உள்ள துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான கந்தசாமி ரூபன் (25 வயது) என்பவரே ஒரு காலை இழந்துள்ளதுடன் மற்றைய காலிலும் படுகாயமடைந்துள்ளார். (ஒ-86)

# நீண்ட காலத்தின் பின்னர் 'பழையகோட்' வியாபாரம் குடாநாட்டில் மீள ஆரம்பம்

சதுமலை,மார்ச்29

பழைய உடைகளைப் பெற்றுக் கொண்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பாத்திரங்களை வழங்கும் 'பழைய கோட்' வியாபாரம் மீண்டும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம் பெறுகின்றது.

தரைப்பாதை திறக்கப்பட்டபின்னர் 'பழைய கோட்' வியாபாரிகள் தற்போது குடாநாட்டுக்கு அதிகளவில் வரத்தொடங்கியுள்ளதையும் -

தம்மிடம் உள்ள பழைய உடுபுடவைகளை இவர்களிடம் கொடுத்து 'பிளாஸ்ரிக்' வாளிகள் உட்பட புதிய பொருள்களை வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுவதையும் - அவதானிக்க முடிகிறது.

இதேசமயம், 'பழைய கோட்' வியாபாரிகள் என்று கூறிக்கொண்டு, திருடர்களும் தம் கைவரிசையைக் காட்டும் வாய்ப்பு உள்ளது. ஆகவே, இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டால் விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்க்க முடியும். (ஒ-139)

# 'ஆர்கொலோசதுரர்' கொழும்பில் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்ப்பாணம் நாடக அரங்கக்கல்லூரியினரின் 'ஆர்கொலோ சதுரர்' நாட்டிய நாடகம் இன்றும் நாளையும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவாக்கத்திலும் திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையிலும் உருவான இந்த நாடகத்தில் பங்கேற்கும் கலைஞர்கள் இதற்காக நேற்றுக்காலை கொழும்புக்குப் புறப்பட்டனர். (ஒ-4)

## ஒறுகொடவத்த சிறுமி மீட்பு சம்பவம்:

# முதன்முதலில் விசாரணை நடத்திய பொலீஸ் சார்ஜன்ட் இடமாற்றம்

கிராண்ட்பாஸ், ஒறுகொடவத்த தொடர்மாடி வீடு ஒன்றில் 13 வயது சிறுமி ஒருவர் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டிருந்த சம்பவம் குறித்து உரியவாறு விசாரணை நடத்தப்படாதது தொடர்பாக கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்தின் சார்ஜன்ட் ஒருவர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து குறிப்பிட்ட வீட்டுக்கு முதன் முதலில் சென்று விசாரணை நடத்திய பொலீஸ் சார்ஜன்டே இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்.

விசாரணை மேற்கொண்ட அவர், அந்த வீட்டில் சிறுமி எவரும் கட்டி வைக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார். இதனால் ஆத்திரமுற்ற அப்பிரதேச மக்கள் அந்த வீட்டைத் தாக்கி கட்டிவைக்கப்பட்டிருந்த சிறுமியை மீட்டனர்.

இதனை அடுத்து பொதுமக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல் மூண்டது. இம்மோதலில் 6 பொதுமக்களும் 3 பொலீஸாரும் காயமடைந்தனர்.

சிறுமி மீட்கப்பட்டதை அடுத்து வீட்டின் உரிமையாளரான பெண், பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஐ)



**தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய மகளிர் எழுச்சி மாநாடு, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் மட்டு.-அம்பாறை மாவட்ட சமூகப் பெண்கள் மேம்பாட்டு அமைப்பின் அனுசரணையுடன் ஆரம்பமானது.**

**இந்த மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் மகளிர் படையணித் தளபதி நிலாவினி தேசியக் கொடியேற்றி வைப்பதையும், ஊர்வலத்தின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.**

# சமயசந்நிதிகளில்

சுதுமலை,மார்ச்29

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மஹோற்சவம் தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெற்று அடுத்த மாதம் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்29

பாண்டியன்தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை பால் சாத்தப்படும் நிகழ்வு இடம்பெறும் நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்29

கைதடி, வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் சஹஸ்ர சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

ஆலயத்தில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீவெங்கடேசப் பெருமானுக்கு நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகமும் அன்று இடம்பெறவுள்ளது. (ஒ-3)

# ஈராக் மீதான போர் நீண்டு தொடருமென அமெ., பிரிட்டிஷ் அரசுகள் தெரிவிப்பு!


ஈராக்கிய டாங்கிப் படையினர்

வாஷிங்ரன்,மார்ச்29

ஈராக் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக அறிவித்துள்ளன. தமது மக்களுக்காக வெளியிட்ட அறிக்கையில் இரு நாடுகளும் இணைந்து இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தி



விட்டன. எவ்வளவு காலம் போர் நடித்தாலும் அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து அகற்றுவதே தமது இலக்கு என்று இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

9ஆவது நாளாக ஈராக் மீது அமெரிக்கப் படைகள் போர் தொடுத்துள்ள நிலையில், இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் சில வாரங்களோ அல்லது மாதங்களோ மட்டுமே போர் நீடிக்கும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது. எனினும், போர் தொடங்கியதும் உரையாற்றிய புஷ், இறுதி நேரத்தில் போர் நீண்டு செல்லக் கூடும் என்று தெரிவித்திருந்தார்.

இப்போது போர் நீண்ட காலத்துக்குத் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"போர் எத்தனை காலம் நீடித்தாலும் சதாமை பதவியில் இருந்து அகற்றுவதே எமது நோக்கம்" - என்றார் புஷ். அவரது நெருங்கிய கூட்டாளியான பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், இது குறித்துக் குறிப்பிடும் போது "போர் கஷ்ரமும் இறுக்கமும் உள்ளதாக இருக்கின்றது" என்றார்.

"பேரழிவு ஆயுதங்கள் விடயத்தில் ஈராக்கிய அரசிற்கும் தீவிரவாத அமைப்புக்களுக்கும் இடையில் தொடர்புகள் உண்டு" - என்றும் பிளயர் மேலும் கூறினார்.

**தாக்குதல் தொடர்கிறது**

9ஆவது நாளாக ஈராக் தலைநகர் பக்தாத் மீது வான்வழித் தாக்குதல்களும் ஏவுகணைத் தாக்குதல்களும் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன.

முதற்றடவையாக பி-52 விமானங்கள் பக்தாத் மீது 4,500 இறாத்தல் நிறையுடைய குண்டுகளை வீசியுள்ளது. உறுதியான பதுங்கு குழிகளையும் தகர்த்தெறியும் வல்லமை வாய்ந்தவை இந்தக் குண்டுகள். எனினும் இந்தக் குண்டுகள் வீசப்பட்டன என்பதை அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் உறுதி செய்யவில்லை.

ஆனாலும் இதுவரை நடந்த குண்டுத் தாக்குதல்களை விட பெரியதொரு குண்டுத் தாக்குதல் ஓசையைத் தாம் கேட்டதாக அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக் காலையில் மட்டும் பக்தாத் மீது 600 தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை -

விமானங்களும் ஏவுகணைகளும் நடத்திய தாக்குதலில் பக்தாத்தின் தொலைத் தொடர்புகள், கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தாம் நிர்மூலமாக்கி விட்டதாக, கட்டாரில் உள்ள அமெரிக்கப் படைகளின் தலைமையக அதிகாரிகள் கூறினர். ஒரேநாள் இரவில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் தொலைத்தொடர்புக் கட்டுப்பாட்டு நிலையம் தகர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தனர்.

தலைநகரில் நிர்மூலம் செய்யப்பட்ட இரு கட்டுப்பாட்டு நிலையங்களைத் தாம் கண்டதாக அதிகாரி ஒருவர் கூறினார். ஏவுகணைகளில் ஒன்று கட்டுப்பாட்டு நிலையத்தை தாக்கியதில் அது வெறும் இடிபாட்டுக் குவியலாகக் காட்சி அளித்ததாக அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் மூலம் பக்தாத்தின் தொலைத்தொடர்பு அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் படையினருக்கான கட்டளைகளில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**தெற்கில் நிலை**

தலைநகர் பக்தாத்துக்குத் தெற்கே 160 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நஜவ் என்ற இடத்தில் யூப்ரட்டீஸ் ஆற்றைப் பாலத்தின் மூலம் கடக்க முயன்ற பிரிட்டிஷ் படைகளுக்கு ஈராக்கியப் படைகளிடம் இருந்து கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டது. ஈராக்கியப் படையினர் சுமார் ஆயிரத்து 500 பேர் வரையில் அந்த சண்டையில் ஈடுபட்டதாக பிரிட்டிஷ் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.


ஈராக்கின் வடபகுதியில் விமானங்கள் மூலம் கொண்டு சென்று தரையிறக்கப்பட்ட அமெரிக்க பரா துருப்பினரில் ஒருவர் தரையிறங்கியதும் தன் உடமைகளை சரிசெய்தபடி எழுகிறார்.

அவர்களை எதிர்க்க பிரிட்டிஷ் படைகள் டாங்கிகளையும் ஏறிகணைகளையும் பயன்படுத்தியதாக அவர்களுடன் சென்றுள்ள 'ரொய்டர்' செய்தி நிறுவன செய்தியாளர் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் படையினர் ஈராக்கிய இராணுவத்துடன் மோதுகின்றார்களா அல்லது குடியரசுப் படையினருடன் மோதுகின்றார்களா என்பது தெளிவாயில்லை என்றார் அவர். சில மணி நேரம் நீடித்த இந்தச் சண்டை காலை 3 மணியளவில் முடிந்ததாக அவர் சொன்னார்.

**தயார்ப்படுத்தல்**

மேற்குப்புறமிருந்து முன்னேறி ஆற்றைக் கடந்து பக்தாத்தின் 50 கிலோ மீற்றர் தூரம் வரை - கர்பாலா என்ற இடம்வரை - முன்னேறியுள்ள அமெரிக்கப் படையினர் புதிய தாக்குதல் ஒன்றுக்கு தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர். அவர்களை எதிர்கொள்ள ஆயத்தமாக நிற்கும் ஈராக்கிய குடியரசுப் படையினருடன் மோதுவதற்காகவே அவர்கள் இந்தத் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக் போரில் மிக முக்கிய போருக்குரிய களமாக கர்பாலா மாறி வருகின்றது என்று அமெரிக்கப் படையின் பொறியியலாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## குர்டிஷ் கெரில்லாக்கள் ஈராக் மீது தாக்குதல்

ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஒருபுறம் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்க, மறுபுறத்தில் வடக்கு ஈராக் பகுதியில் இருக்கும் குர்டிஷ் இனத்தவர்களின் கெரில்லாப் படையினரும் ஈராக்கியப் படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். சில இடங்களில் ஈராக்கிய இராணுவத்தினரின் சிறிய முகாம்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

பட்ரியாட்டிக் குர்டிஷான் படை என்ற கெரில்லா அமைப்பைச் சேர்ந்தவர்களே இத்தகைய தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கில் உள்ள குர்டிஷ் இனத்தவர்கள் சதாமுக்கு எதிரான போக்கைக் கொண்டவர்கள். இதனால் சதாமின் படைகளை எதிர்த்து அவர்கள் இந்தக் கெரில்லா அமைப்பை ஸ்தாபித்திருந்தார்கள். வடக்கு ஈராக்கின் சில பகுதிகள் இவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

இந்தப் பகுதியிலேயே அமெரிக்க பரா துருப்பினர் வான்வழியாகத் தரையிறக்கப்பட்டனர். தொடர்ச்சியாக மேலும் துருப்புக்கள் அங்கு தரையிறகக்கப்பட்டு வருகின்றன. அங்கிருந்து முனனேறி வருகின்றனர்.

அமெரிக்கப் படைகளின் முன்னேற்றத்தை அடுத்து உற்சாகங் கொண்ட குர்டிஷ் கெரில்லாக்களும் ஈராக்கிய முகாம்களைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

தரையிறக்கப்பட்ட அமெரிக்க வீரர்கள் வடபகுதியில் இருந்த ஈராக்கின் சிறிய விமானத் தளம் ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர். (ம)




கூட்டுப்படையினரின் தாக்குதலில் சிதைந்த கட்டடம் ஒன்றிலிருந்து தன் உடைமைகளை மீட்கும் ஈராக்கியர் ஒருவரையும் எண்ணெய் கிணறு ஒன்று தீப்பற்றி எரிவதையும் படங்களில் காணலாம்.

# சதாம் சிரியாவுக்குத் தப்ப இரகசிய விமானம் தயார்?

லண்டன்,மார்ச்29

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் மனைவி மற்றும் பிள்ளைகள் சிரியாவில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தேவையேற்பட்டால் சதாமும் தப்பிச் செல்வதற்கு விசேட விமானம் ஒன்று தயார் நிலையில் இருப்பதாகவும் லண்டனில் உள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப் படைகளிடம் பிடிபடாமல் இருப்பதற்காகவே அவர் இவ்வாறு நடந்துகொண்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

ஈராக்கில் இருந்து தப்பி வெளியேறி லண்டனில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஒருவரை மேற்கோள் காட்டி 'டெய்லி மெயில்' என்ற பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈராக் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்துவது உறுதி என்று தெரிந்ததுமே தனது மனைவி மற்றும் பெண் பிள்ளைகளை அவர் சிரியாவுக்கு அனுப்பிவைத்துவிட்டார். அதே போன்று முக்கிய அமைச்சர்களும் தமது குடும்பத்தினரை சிரியாவுக்கு அனுப்பி வைத்துவிட்டனர்.

சிரியாவில் தனது மனைவி, மகள்களுக்குப் பாதுகாப்பாக 60 மெய்ப் பாதுகாவலர்களையும் சதாம் கூடவே அனுப்பிவைத்துள்ளார்.

ஈராக்கில் நிலைமைகள் கட்டு மறினால் தானும் தப்பிச் செல்ல ரகசிய விமானம் ஒன்றையும் அவர் ஏற்பாடு செய்துள்ளார். அதற்கு வசதியாகத் தனது சொத்துக்களை ஏற்கனவே ஈராக்கிய பணக்காரர்களுக்கு விற்றுவிட்டார் அவர்.

தப்ப-முடியாதவாறு தான் சிக்கிக் கொண்டால் தன்னைச் சுட்டு விடும்படி தனது மெய்ப்பாதுகாவலர்களுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார் - என்கிறது அந்தப் பத்திரிகை. (ம)

சதாமும் அவரது குடும்பத்தினரும்



# கூட்டுப் படையினர் 700பேர் உயிரிழப்பு!

## ஈராக் தூதர் தெரிவிப்பு

பக்தாத்,மார்ச்29

ஈராக்கில் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் துருப்பினர் 700 பேரைத் தாம் கொன்றுவிட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

தெற்கே குவைத்தில் இருந்து முன்னேறிச் செல்லும் அமெரிக்கப் படைகள் மீது ஆங்காங்கே ஈராக்கியப் படைகள் திடீரென ஊடறுத்து கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களை நடத்திவருகின்றன.

இந்த நிலையில் 7 நாள்கள் நடந்த போரில் 700 அமெரிக்க, பிரிட்டிஷ் படையினரைக் கொன்றுவிட்டதாக ரஷ்யாவுக்கான ஈராக்கியத் தூதுவர் அபாஸ் கலாப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

24மணி நேரத்துக்குள் அன்நஜாப் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் 500 கூட்டுப் படையினரைத் தாம் கொன்றதாகவும் 3 விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈராக் படையினரின் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல்தான் அமெரிக்கா மேலும் 30ஆயிரம் படையினரை களத்திற்கு நகர்த்தியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் அமெரிக்க கூட்டுப் படைகள் அப்பாவி ஈராக்கிய மக்களைக் குறிவைத்துத் தாக்கி வருவதாக ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.

முக்கிய நகரங்களில் கூட்டுப் படைகள் நுழைவதை எதிர்க்கும் பொதுமக்களை அவர்கள் கொன்று குவித்து வருகிறார்கள். பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள் என்ற பாகுபாடு எதுவுமின்றி ஈராக்கிய மக்கள் கொல்லப்படுகின்றனர் என்று ஈராக் சுகாதார அமைச்சர் முபாரக் கூறினார். (ம)

புத்தாண்டுக்குள் அனுமதிக்க வேண்டும்; அன்றேல்

# தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் மக்கள் பலாத்காரமாக மீளக்குடியமர்வர்

## கைதடி பல நோ.கூ.சங்கத் தலைவர் சூளுரை

யாழ்ப்பாணம்,மார்ச்29

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கைதடி, நாவற்குழி, தனங்களப்பு மற்றும் மறவன்புலோ ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும்.

இல்லையேல் எத்தகைய தடைகளையும் தாண்டி அத்துமீறி மீளக் குடியமர்வோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தென்மராட்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 4ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமரப் படையினர் தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர்.

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, ஓராண்டு கடந்த நிலையிலும் மேற்படி பிரதேசத்தை உயர்பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தி அப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர படையினர் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இது தொடர்பாகப் பல்வேறு மறியற்போராட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். அவ்வேளையில் எல்லாம் படைத்தரப்பினர் மக்களை மீளக்குடியமர்வதற்கு விரைவில் அனுமதி வழங்குவதாகக் கூறினர். ஆனால், இதுவரை அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

இதனால், அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் எஞ்சியுள்ள வீட்டு உபகரணங்களும் தளபாடங்களும் சீருடையினரின் ஒத்துழைப்புடன் கொள்ளையிடப்பட்டு வருகின்றன.

இதனை அடுத்தே, அப்பகுதியைச சேர்ந்த அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி சொந்த இடங்களில் பலத்காரமாகச் சென்று மீளக்குடியமர்வதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

### கணனிப்பயிற்சி வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச்,29

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினர் பருத்தித்துறை தென்மராட்சி, ஊர்காவற்றுறை, காரைநகர், நல்லூர், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கணனிப்பயிற்சி நிலையங்களை நிறுவி கணனிப் பயிற்சியினை வழங்கவுள்ளனர்.

வருடத்தில் நான்கு மாதங்கள் தலா 20 பயனாளிகள் வீதம் மூன்று கணனிப்பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன என யாழ்.செயலக புனர்வாழ்வு பிரிவினர் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளனர்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் விரைவில் படித்த மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

### வேலையற்றோரை பதிவு செய்ய வடவடிக்கை

கொடிகாமம்,மார்ச்29

தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட 18வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி - வேலைவாய்ப்பு சம்பந்தமான ஒன்று கூடலும் பதிவு செய்தலும் எதிர்வரும் 9ஆம திகதி புதன்கிழமை 2 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (எ-74)



சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி, 42 ஆண்டுகள் ஆசிரிய சேவையின் பின்னர் இளைப்பாறிய அதிபர் திருமதி நா.செல்லையாவுக்கு சங்கானைக் கல்விக்கோட்ட அதிகாரி சீ.செல்லையா வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் புதிய அதிபர் ஆ.பேரின்நாயகம், முன்னாள் அதிபர் மு.சுப்பிரமணியம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஐ.நா.அமைப்பு வழங்கிய நிதி என்னவானது?

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.மாவட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக ஐ.நா.அமைப்பொன்றினால் வழங்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தற்போது கேள்வி எழுப்பப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மனித உரிமை தொடர்பான கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு ஆளணி மற்றும் இதரவசதிகளைச் செய்வதற்கும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் என ஐ.நா.அபிவிருத்தித் திட்ட நிறுவனம் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தை வழங்கியிருந்தது.

இலங்கை மனித உரிமை ஆணைக குழு அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென ஒருவரை நியமித்து இன்று 6 மாதங்கள் கழிந்த நிலையில் அப்பணத்திற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அந்த நிதியில் இருந்து எந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இல்லை என்று ஆணைக்குழு அதிகாரி ஒருவர் கூறினார்.

இதற்கிடையில் -

மனித உரிமை ஆணைக்குழுவின யாழ்.பிராந்திய நிலையத்திற்கு வேண்டிய ஆளணி மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்கப்படாமையினால் அதன் செயற்பாடுகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அண்மையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# செபவாழ்வு வாழ்வோம்

தம்மைத்தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவார். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவார என்கிறார் யேசு. (லூ.18:14).

தம் உயர்வு கருதும் செபங்கள் இறைவனைச் சேரவோ, மகிழ்விப்பதோ இல்லை. பிறர் நலம் அதைவிட மேலாகத் தன்னிலை உணர்ந்த தாழ்ச்சியை இறைவன் ஏற்று மகிழ்கிறார்.

**தவக்காலச்சிந்தனை**
**-25ஆம் நாள்-**

இன்றைய நிலையில் எமது குடும்பங்களிலே ஒற்றுமையில்லாமலும் சீர்குலைந்து போவதற்கும் காரணம் குடும்பங்களில் செபவாழ்வு இல்லாமையாகும். ஒன்றாய் செபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும் என்பதை உணர்ந்து வாழ குடும்பங்களில் கூடிச் செபிப்பதன் மூலம் விசுவாசம் சுவீட்சமாக வளரும்.

மற்றவர்கள் பார்க்கவேண்டும். என்பதற்காக சத்தமாகவும் மற்றவர்களை தாழ்த்திக் கொண்டு எமது செபத்தை சொல்லுவோமேயானால், அது இறைவனைப் போய்ச் சேராது. பரிசேயனின் செபம் போலாகிவிடும். எமது பரிசுத்த தந்தை கூறுவது போன்று நாம் செபம் சொல்லும் போது யேசுவின் திருமுகத்தை, கருணை முகத்தை, அன்பு முகத்தை உற்று நோக்கிச் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவரது திருமுகம் எம்மில் பதியும். அவரைப் போல மாறவும் முடியும்.

**திருமதி டெ.றொ.ஜேசுராஜன்**

இக்காலம் எமக்கு தகுந்த காலம். நாம் நடந்துவந்த பாதைகளை திரும்பிப் பார்த்து, அதற்காக செபிக்க அழைத்து நிற்கின்றது. நாமும் எமது செபமும் எந்நிலையில் உள்ளன?

# நகரின் மத்தியில் படைமுகாம் அமைப்பது இயல்புவாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளது

## கஜேந்திரகுமார் எம்.பி. பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான நகரின் மத்தியில் உள்ள காணிகளில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இராணுவப் படைத்தளம் அமைப்பது யாழ்.குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான வளாகத்தில் புதிய படைமுகாம் அமைக்க படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கக் கட்டடங்கள், காணிகள் மற்றும் தனியார் வாழ்விடங்கள் என்பனவற்றில் நிலைகொண்டுள்ள படையினர் உடனடியாக அங்கிருந்து வெளியேறி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைக்கவேண்டும். ஆனால், அதற்கு மாறாக யாழ்.குடாநாட்டில் யாழ்.மாநகர மண்டபக் கட்டட வளாகம், யாழ்.கோட்டை, பழைய வாடி வீட்டுப் பகுதி மற்றும் பழைய நீதிமன்ற வளாகம், சுப்பிரமணியம் பூங்கா என்பனவற்றை உள்ளடக்கியதாக பாரிய இராணுவ முகாம் ஒன்றை நிறுவும் பணியில் இராணுவம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயல் எவ்வகையிலும் நியாயமற்றது. பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் அது அமைந்துள்ளது.

இந்த இடங்களில் முன்னர் இருந்த அரச அலுவலகங்கள் மீளக் கட்டியெழுப்பப்படுவதற்கான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகையில், இக்காணிகள் இராணுவத்தினரால் பலவந்தமாகச் சுவீகரிக்கப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், இப்பகுதி யாழ்.குடாநாட்டின் இதயப் பகுதியும் ஆகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்றாக மீறும் வகையிலான பாதுகாப்பு அமைச்சின் இச்செயலை உடனடியாகத் தடுத்து நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ம-8)


## ஏஸ்வேஸ் ஏவியேஷன்

இல. 1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே. 021 222 3891

071 348888, 071 349999, 0777 730666

| காலைநேர விமானசேவை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
| --- | --- | --- | --- | --- |
| திங்கள், செவ்வாய், புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |
| மாலைநேர விமானசேவை | | | | |
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி, சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு :- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★★ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து

யாழ் - பலாலி - யாழ்

இரத்மலானை - கொட்டாஞ்சேனை - இரத்மலானை

★★ வெளிநாட்டு பிரஜைகளுக்கும், உள்நாட்டு பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது. ஒருவழி - 2,425/- இருவழி - 4,550/-

(சி-27033)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 29 - 03 - 1932



உதிர்வு 28 - 02 - 2003

### அமரர் தம்பையா ஆறுமுகம்

(கருங்காலி, காரைநகர்)

28-02-2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி, கடிதம்மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து துயர்பகிர்ந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (29.03.2003) சனிக்கிழமை 97/26, புகையிரத நிலைய வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியாவில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*97/26, புகையிரத நிலைய வீதி,*
*வைரவப் புளியங்குளம், வவுனியா.*
*T.P.: 074 - 589233*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(16061)

உதயன்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு

ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் எதிர் வரும் ஜூன் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் உதவும் நாடுகள் கூட்டத்தில் ஒரு தரப்பாகக் கலந்துகொள்ள இருப்பதை ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

நான்கு இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கின்ற உதவும் நாடுகளின் கூட்டம், இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஒரு முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜப்பான், அமெரிக்கா, நோர்வே இந்த மூன்று நாடுகளுடன் நான்காவது தரப்பாக ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டத்தில் கலந்துகொள்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதியின் தேவைகள் பற்றிய விரிவான மதிப்பீடுகளை ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், உலக வங்கி ஆகியன தற்போது மேற்கொண்டு வருகின்றன.

இந்த மதிப்பீடுகள் ஜப்பான் உதவும் நாடுகள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிதி உதவி கோரப் படும். இவற்றைவிட முழு நாட்டுக்கும் தேவையான உதவிகள் பற்றிய மதிப்பீடுகளை அரசு சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட கடந்த 19 வருட போரினால் வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளை சீர்செய்வது தொடர்பான மற்றோர் அறிக்கையையும் ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

இந்த மதிப்பீடுகள் எவ்வாறு அமைந்திருக்கப் போகின்றன என்பது ஒருபுறம் இருக்க, ஜப்பானில் நடக்கவிருக்கும் உதவும் நாடுகள் கூட்டம், இலங்கை விவகாரம் மீதான சர்வதேச கவனத்தை மேலும் ஈர்த்திருக்கிறது. இந்தக் கூட்டத்தில் நேரடியாகப் பங்குபற்ற ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்திருப்பது பிரதானமான அம்சம்.

உதவும் கூட்டத்தின் இணைத் தலைமைப் பொறுப்பில் இணைவதன் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15இற்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கையில் உருவாகியிருக்கும் சமாதான சூழலை நிலைபெறச் செய்யத் தங்கள் முழு ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றன.

ஈராக் போரினால் உருவாகியிருக்கும் சர்வதேச சூழ்நிலைக்கு மத்தியிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இலங்கை விவகாரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. உதவும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதன் மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இதனை உறுதிசெய்துள்ளன என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருப்பது வரவேற்கப் படவேண்டியது.

இன்று பிரதானமாகப் பேசப்படுகின்ற உலக விவகாரங்களின் வரிசையில் இலங்கைப் பிரச்சினையும் அதற்கான சமாதான முயற்சிகளும் முக்கிய இடத்தை எட்டியிருக்கின்றன. இத்தகைய சர்வதேச நிலைமை முன்னர் ஒருபோதும் ஏற்பட்டதில்லை.

சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்கான சர்வதேச சூழ்நிலை இவ்வாறு சாதகமாக மாறிவருகின்ற போதிலும் உள்நாட்டில் சமாதான முயற்சிகளின் பெறுபேறுகளை சீர்தூக்கிப் பார்த்தால் வெறும் சலசலப்பு மட்டும்தான் என்ற நிலைமை.

இதுவரை இடம்பெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகளை அரசுத் தரப்பு செயலில் இன்னமும் நிறைவேற்றவில்லை. தமிழர் தாயகத்துக்கான பொருளாதார மற்றும் மனிதாபிமான விடயங்கள் தொடர்பாக உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாமை குறித்து, புலிகள் தரப்பு கடும் அதிருப்தி கொண்டிருக்கிறது. 'பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை' என்றவாறு அரசின் செயற்பாடுகள் எல்லாமே மந்த கதியில்தான் நகருகின்றன. இதைவிட அவநம்பிக்கை தருகின்ற பல முயற்சிகளில் படைகள் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றன. உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே படைகளை விலக்கும் விவகாரம் தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதாக இருக்கிறது.

யாழ். நகரின் மத்தியில் பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி - காணிகளை சுவீகரித்து - புதிய படைத்தளம் நிறுவும் முயற்சியில் இராணுவம் விடாப்பிடியாக - செயற்படுவது இதனையே வெளிப்படுத்துகின்றது.

இலங்கை விவகாரம் மீது சர்வதேச அக்கறை அதிகரித்துக்கொண்டுவர மறுபக்கத்தில் சமாதான முயற்சிகளின் பெறுபேறுகள் உள்நாட்டில் பூஜ்ஜியமாக மாறிக்கொண்டிருக்கின்றன.

இதனை இப்படியே - இந்தப் போக்கில் - விட்டு விடுவது நல்லதல்ல.

கடற்றொழிலாளர் சம்மேளனம் ஊடாக

# கட்டுமரம், வள்ளங்கள் வழங்க யு.என்.டி.பி. நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் கட்டு மரங்கள், வள்ளங்களை வழங்க ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் முன்வந்துள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனங்களின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மீன்பிடித்தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் 70 கட்டுமரங்களும், 15 வள்ளங்களும் இவ்வாறு வழங்கப்படும்.

வேலணை, சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவில் உள்ள 85 பயனாளிகள் இவற்றைப் பெறுவர் என்றும் -

இதற்கென 17 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் - திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத்திற்கு 10 லட்சம் ரூபா செலவில் ஐஸ் உற்பத்தி இயந்திரம் ஒன்றும் சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(எ-180)

## மாதர் மான்மியம்

### ஹப்பி பேத்டே ரு யூ

ஆண்டுகள் எட்டின் பின்னே
ஆனந்தி கருத் தரித்தாள்
வேண்டியே விநாயகனை நாளும்
வித்தகி நோன் பிருந்தாள்
ஆண்மகனின் பிறந்த நாளை
அவள் பெருமெடுப்பில் செய்து
வேண்டிய முட்டை கேக்கில்
விரும்பியே மெழுகு நட்டு
கண்மணி மகவைக் கொண்டு
கட்டியே அணைத்து நாத்து
வண்ணமாய் ஆங்கிலத்தில் பாடி
வாய்க்குள் நுழைத்தாள் கேக்கை.

- விகடகவி.

# அவசரகாலச் சட்டம் காலாவதியான பின்னரும் உயர்பாதுகாப்பு வலயமா?

## மனிதநேய அமைப்புகள், அரசியல்கட்சிகள் கேள்வி

யாழ்ப்பாணம்,மார்ச்29

அவசரகாலச் சட்ட விதிகள் காலாவதியான பின்னரும் யாழ். மாநகர வளாகம் உட்பட ஏனைய பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயம் அமைப்பது என்பது பாரிய யுத்தநிறுத்த மீறலாகும். அத்துடன், அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகவும் உள்ளது.

எனவே, இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக் குழு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும்.

ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நடத்திய 'சமாதான வழிமுறையில் மனித உரிமை' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மனித உரிமை ஆணைக்குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான திட்ட வரைபு ஒன்றை முன்வைத்து கருத்து வெளியிடும்போதே அவர்கள் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து, அவசர காலச் சட்டவிதிகள் காலாவதியாகிவிட்டன. இந்தச் சூழ்நிலையில், பாதுகாப்புப் படையினர் தனியார் வீடுகள், மதவழிபாட்டிடங்கள் மற்றும் பொது இடங்களில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளதுடன், புதிய காவலரண்களையும் அமைத்து வருகின்றனர்.

சீருடையினரது இச்செயற்பாடானது அடிப்படை மனித உரிமை மீறும் செயலாகவுள்ளது. எனவே, அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திட்டவரைபுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

★ நாட்டை ஆளும் அரசு, தமிழர்களை சிறுபான்மை இனம் எனக் கூறுவது தவறானது. அவர்களை ஒரு தேசிய இனமாக அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

★ சகல அரச திணைக்களங்களிலும் சிங்கள மொழிக்கு வழங்கப்படுவதுபோல தமிழ்மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

★ பௌத்த மதம் என்பது சிங்கள மக்களுக்குரியது. சிங்கள மக்கள் குடியிருக்காத தமிழ்ப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

★ தமிழ் மக்களின் தொழில் முயற்சிகள் அரசினால் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டுவருகின்றன. அவை நீக்கப்பட்டு, எமது பொருளாதார வளங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்.

★ கடலில் மீனவர்கள் எவ்வித பாதுகாப்புக் கெடுபிடிகளுமின்றி சுதந்திரமாக தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

★ யுத்தம் ஆரம்பமான காலம் முதல் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொள்வதோடு, காணாமற்போவதற்கு காரணமானவர்களை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு நான்கு தடவைகள் விசாரணைகளை மேற்கொண்டது. அது தொடர்பான அறிக்கை எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. அவ்விசாரணைகள் தொடர்பான அறிக்கையை உடனடியாக வெளியிடுவதுடன் காணாமற்போனவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதனைக் கண்டறிந்து, அவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ எந்தவித விசாரணைகளும் இன்றி தென்பகுதிச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கான சகல வசதி வாய்ப்புகளும் திட்டமிட்ட வகையில் அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை தேவை.

★ தமிழ் ஊடகவியலாளர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டும்.

★ அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளும் சுதந்திரமாக கருத்துக் கூறவும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் எத்தகைய உயிர் அச்சுறுத்தலும் இன்றி சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும்.

★ மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதோடு, அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறாமல் இருப்பதனைக் கண்காணிக்க வேண்டும்.

★ உறுதி தரக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வல்லமை பொருந்திய நடுவர் ஒருவரை நியமித்தல்.

★ உத்தியோகப்பற்றற்ற வரி வசூலிப்புகள் இடம்பெறுவதைத் தடுத்தல்.

★ உத்தியோகபூர்வ சட்ட ஒழுங்குகள் நடைமுறைப்படுத்துவதனை அவதானித்தல்.

★ மனித உரிமை பற்றி எடுத்து இயம்பும் அரசே மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.

(எ-5-86)

# காலம் கடந்த பிறப்பு, இறப்புக்கள் நடமாடும் சேவைமூலம் பதியப்படும்

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஏற்பாடு

வலி.வடக்கு,மார்ச்29

காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களை நடமாடும் சேவை மூலம் மேற்கொள்வதற்கு பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்யும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள இடப்பெயர்வுகள் காரணமாக பலருடைய இறப்புக்கள் மற்றும் பிறப்புக்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளன.

இதன் காரணமாக பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்தல் மற்றும் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் சான்றிதழ்கள் இல்லாமல் பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது தெரிந்ததே.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக இந்தப் பதிவுகளை மேற்கொள்வதற்கென பிரதேச செயலகங்களிடம் நடமாடும் சேவைக்கான திகதிகளை ஒதுக்கித்தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவுறுத்தல்களை பிரதேச செயலகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றுக்கு பிறப்பு, இறப்பு பதிவுத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது.

மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-85)

### நாளை

பங்குனி 16
ஞாயிற்றுக்கிழமை
(30.03.2003)
திதி: திரயோதசி
முற்பகல் 10.39 வரை.
நட்சத்திரம: சதயம்
முன்னிரவு 7.18 வரை.
சுபநேரம் : 9.13 - 10.43
ராகுகாலம் : 4.43 - 6.13
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது. ஆத்மீக சக்தியால் அவரை உணரலாம்.

# சுகாதார நலனோம்பு அமைச்சு தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மார்ச்29

சுகாதார போசனை, நலனோம்பு அமைச்சினால் 2003ஆம் ஆண்டில் மாணவத் தாதிமார் பயிற்சிக்கு ஆள்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 2000,2001ஆம் ஆண்டுகளில் ஜி.சி.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பாடநெறியில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் , யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள, பிரதி மாகாணப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் அலுவலகத்தில் தமது தேசிய அடையாள அட்டையைக் காண்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

விண்ணப்பங்கள் யாவும் 2003.04.14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் -

மேலதிக விவரங்களை கோப்பாய், ஊர்காவற்றுறை, மானிப்பாய், பருத்தித்துறை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் -

பிராந்திய மாகாணப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் அலுவலகத்திலும் பார்வையிடலாம் என்றும் வைத்திய கலாநிதி உ. சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (எ)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
-
06
-
1921



மறைவு
01
-
04
-
2000

## அமரர் சின்னத்தம்பி பொன்னையா

மூன்று ஆண்டுகளென்ன முப்பது ஆண்டு
சென்றாலும் மறவோம்.

**ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.03.2003) சனிக்கிழமை சொந்த இடமான புலோப்பளையில் நடைபெறும். உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*புலோப்பளை,*
*பளை.* (15824)
பொ.பரமசாமி குடும்பத்தினர்.
(மகன்)

# ஈரவிழிகளில் ஈராண்டு

மகிழ்வில்
23
~
06
~
1980



துயரில்
21
~
03
~
2001

## செல்வரட்ணம் சுதர்சன் (சுதன்)

திதி: 29.03.2003

ஈராண்டென்ன இதயம் உள்ளவரை
எமது துயர் ஆறாது.

*"சுதன் அகம்"*
*விக்கினேஸ்வரா வீதி,*
*நிற்சாமம், சங்கானை.*

பிரிவால் துயருறும்:
அப்பா,மம்மி,
சகோதரர்கள்:உமா,சர்மி,சுசி,நிது.
(15997)

# பரிசளிப்பு விழாக்கள்

வலிகாமம்தெற்கு,மார்ச்29

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணியளவில் அதிபர் ச.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்து கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

(152)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச்29

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தால் நடத்தப்பட்ட 'அழகெழல்' போட்டியின் பரிசளிப்பு வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற இசை, நடனம், நாடகம் ஆகியனவும் நிகழ்வில் நடைபெறவுள்ளன. சித்திரப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மன்றத்தின் தலைவர் அ.ஜெயதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனின் வாழ்த்துரையுடன் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தொழில் அதிபர்களான நா.தெய்வேந்திரம், கே.வி. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பங்குபற்றுவர்.

(ஓ-10)

## மணிப்புரி கிராம மக்களுக்கான
## அவசர கலந்துரையாடல்

**நாளை ஞாயிறு, திங்கட்கிழமைகளில் (30,31-03-2003) ஆகிய தினங்களில் கீழே உள்ள முகவரிக்கு சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

*இல.101, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (16046)
தலைவர்
திரு.நீ.அருளானந்தம் (சேவியர்)

# நீங்கா நினைவுகளில் ஓராண்டு



**அமரர்**
## சங்கரப்பிள்ளை பேரம்பலம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், சங்கீத பூஷணம் - உசன்)

திதி: 29.03.2003

ஓராண்டு கழிந்து விட்டாலும் எங்களை
அன்பாகவும் பண்பாகவும் அரவணைத்து
சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த அருமைத் தந்தையே!
உங்கள் நினைவுகள் எம்நெஞ்சை விட்டு
அகலவில்லை.

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.***

*தகவல்:*
*திருமதி த.பேரம்பலம்*
*உசன், மிருசுவில்.* (16024)
உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.



# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் இளையவி கந்தசாமி

மண்ணில் 14.05.1940 விண்ணில் 21.03.2001

***ஈராண்டுகள் சென்றது எம் ஈரவிழிகள் காயவில்லை!***
***என்றும் ஓயாது உங்கள் நினைவலைகள்***
***நோய் வந்து படுத்தாலும் நோகுதையா எம்முள்ளம்***
***வேதனையைத் தந்துவிட்டு எங்கு நீர் சென்று விட்டீர்?***

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (16058)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# நெஞ்சில் நிறைந்திருக்கும் எம் அன்புச் சகோதரி

## திருமதி றமிலா ஜேம்சன் அரசகேசரி அவர்களின்

## இவ்வுலக வாழ்விற்கு நன்றி கூறும் ஆராதனை ~ 29.03.2003

***ஜனனம் 22. 02. 1967 துயில் 30. 03. 2002***



எமக்கு அன்பானவளே!
பொறுமையினால் எமைப் பெருமைப்படுத்தினாய்!
அன்பினால் அதிகமாய் ஆட்கொண்டாய்
அறியாமையில் எமக்கு அறிவூட்டினாய்
பலவீனத்தில் பலமானாய் - ஆயினும்
பிரியவில்லை நீயும்; இது ஒரு பிரியாவிடைதானே?
களங்கமில்லா எம் கண்மணியே!
கர்த்தர் தம் பாதத்தில் இருப்பவளே! உனை
மறுபடியும் நாம் சந்திப்போம்
நித்தியம்! நித்தியமாய்!!

இன்று நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் நன்றியறிதல் ஆராதனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"புஸ்பவாசா"*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.* (16002)
- குடும்பத்தினர்.

# 'சினி யாத்ரா' எழுப்பும் சலனங்கள்...!


லெஸ்ரர்


பத்ராஜ


வசந்த

'**சினி** யாத்ரா' என்ற பெயரில், இலங்கைத் திரைப்பட விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியுள்ளது. நாளை வரை நடைபெறவுள்ள இவ்விழாவில் ஆறு சிங்களத் திரைப்படங்களும் 'பொன்மணி' என்ற தமிழ்த் திரைப்படமும் 35 மி.மீ. திரையில் காட்டப்படுகின்றன.

மிக நீண்டகாலத்தின் பின்னர் திரைப்படவிழா ஒன்று யாழ். நகரில் நடைபெறுகின்றதென்பதோடு, சிங்கள - தமிழ் இனங்களிடையேயான பிரச்சினைக்கான அரசியல் தீர்வு நோக்கிய உரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கலாசாரத் தளத்திலான உரையாடலின் குறிகாட்டி போலவும் அமைந்து இவ்விழா முக்கியம் பெறுகின்றது.

'தேசிய சினிமா' என்ற துறையில் சிங்களம் வளர்ச்சியடைந்து தன்னை நன்கு நிலைநிறுத்திவிட்டது. 1947இல் 'கடவுனு பொறுந்துவ' என்ற திரைப்படத்திலிருந்து 1956ஆம் ஆண்டுவரை இந்தியாவிலும் இலங்கையிலும் உருவாக்கப்பட்ட சிங்களப் படங்கள், தென்னிந்தியத் தமிழ்ப் படங்களினதும், வட இந்திய ஹிந்திப் படங்களினதும் பிரதிபலிப்புகளாக - யதார்த்தமற்றவையாக - வெறும் பொழுதுபோக்கிற்குரியதான 'வாய்ப்பாட்டு ரீதியிலானவை'யாக இருந்தன.

1956ஆம் ஆண்டின் சிங்களத் தேசிய எழுச்சியின் பின்னணியில், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசின் 'ரேகாவ' திரைப்படத்தின் வருகையோடு இப்போக்கு மாறத்தொடங்குகிறது. ஸ்ருடியோவினுள் சிறைப்பட்டிருந்த சிங்களத் திரைப்படம் வெளியே கொண்டு வரப்பட்டு, பாத்திரங்களின் உண்மையான கதை நிகழ் களங்களில் உருவாக்கப்படத் தொடங்கியது; நவீன சினிமாவின் அடிப்படைக் கூறுகளும் (காட்சிருப் பண்பு, யதார்த்தம் போன்றவை) பேணப்படத் தொடங்கின. அறுபதுகளில் இளைஞர்களினால் தென்னிலங்கையில் முன்னெடுக்கப்பட்ட திரைப்படக் கழகங்களின் இயக்கமும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தோற்றமும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தின; ஆற்றல் வாய்ந்த புதிய கலைஞர் பலரும் பங்களிக்கத் தொடங்கினர். சிறீ குணசிங்க, மஹகம சேகர, ஜி. டி.எல்.பெரேரா, தர்மசேன பத்திராஜ, வசந்த ஒபேசேகர, தர்மசிறி பண்டாரநாயக்க, பிரசன்ன விதானகே என முக்கிய நெறியாளர்களின் பட்டியல் நீளும்.

இவர்களிற் பலரது படைப்புகள் பல்வேறு நாடுகளின் திரைப்பட விழாக்களில் விருதுகளைப் பெற்றுள்ளன.

1962இல் 'சமுதாயம்' என்ற இலங்கையின் முதல் தமிழப் படத்தினை ஹென்றி சந்திரவன்ச என்ற சிங்களவர் உருவாக்கினார். 1993 வரை 28 திரைப்படங்கள் இங்கு தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும், 'பொன்மணி', 'குத்துவிளக்கு', 'வாடைக்காற்று' போன்றவற்றைத் தவிர ஏனைய படங்களில் இந்தியத் தமிழ்ப் படங்களின் தாக்கம் பெரிதும் காணப்படுகின்றது. 'தேசிய சினிமா'விற்குரிய அம்சங்களை அவை கொண்டிருக்கவில்லை. இயல்பற்ற ரீதியில் புனைவாக்கம் செய்யப்பட்ட - மிகை உணர்ச்சிப்பாங்கில் அமைந்த - வெறும் பொழுதுபோக்குச் 'சூத்திரம்' கொண்டவையாக அவை இருந்தன.

பொழுதுபோக்கு இந்தியத் தமிழ்ப் படங்களின் போட்டி, அவற்றிற்குரிய மேம்போக்கு இரசனையினால் கட்டமைக்கப்பட்ட எமது பார்வையாளரின் நிராகரிப்பு மனநிலை, திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்ற அரசு நிறுவனங்களின் மாற்றாந்தாய் மனப்பாங்கு போன்றவை தேசிய தமிழ் சினிமாவின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் காரணிகளில் சிலவாகும்.

கடந்த பத்து ஆண்டுகளில் 'நிதர்சனம்' நிறுவனம் தான் சார்ந்துள்ள விடுதலை இயக்கத்தின் அரசியற் தேவைகளை முக்கியப்படுத்தி முக்கிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல், மக்களுக்கு எழுச்சி ஊட்டுதல் என வீடியோவில் பல படைப்புகளை உருவாக்கியுள்ளது. பிரசாரப் பண்பு மேலோங்கியவையாக இருந்தாலும் பிறிதொரு பக்கத்தில் 'காற்றுவெளி', 'முகங்கள்', 'நேற்று' முதலிய கலைத்துவப் படைப்புகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. 'ஞானரதன்' என்ற எமது முக்கிய நெறியாளர் 'நிதர்சனம்' அமைப்பின் ஊடாகவே தனது படைப்பாளுமையைச் சிறப்புடன் வெளிப்படுத்த முடிந்திருக்கிறது.

எமது மக்களின் கலை ரசனையை மாசுபடுத்தும் இந்தியத் தமிழ்ப் படங்களுக்கு எதிராக விழிப்பூட்டும் செயற்பாடுகள் இன்றியமையாதனவாக உள்ளன. தீவிர திரைப்படக் கழகச் செயற்பாடுகள் போலி ரசனையை மாற்றுவதில் பங்களிக்க முடியும். கலைத்தரமான பிறமொழிப் படங்களைப் பார்க்கும் வாய்ப்புகளை அவை மக்களுக்கு வழங்கமுடியும். அவ்வாறே, வெவ்வேறு மொழிகளில் அமைந்த கலைப்படங்களை கொண்ட விழாக்களும் நல்ல ரசனையை வளர்ப்பதில் துணை செய்யும் அறுபதுகளில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட ரசனை மாற்றங்களுக்கும் புதிய கலைஞர்களின் எழுச்சிக்கும் இவ்விரண்டு செயற்பாடுகளும் துணை செய்ததாக சிங்கள விமர்சகர்கள் பதிவுசெய்துள்ளனர்.

'ஆந்திரே மால்றோ' என்ற புகழ் பெற்ற பிரெஞ்சு எழுத்தாளரின், "நாம் சிறந்த இரசிகர்களானால்தான் சிறந்த படங்கள் உருவாக்கப்படும்" என்ற கூற்று மனங்கொள்ளத்தக்கது!

**அ.யேசுராசா**

எமது பகுதியில் 'திரைப்படக் கழக இயக்கம்' வேரூன்றவில்லை. 1979 - 1981 வரை 'யாழ். திரைப்பட வட்டம்' நல்ல பணியாற்றியது. தொண்ணூறுகளின் ஆரம்பப் பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தில் சிறிதளவு முயற்சிகள் நடைபெற்றன. கடந்த மூன்றரை ஆண்டுகளாக, பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து, ஒவ்வொரு வாரமும் வேறுவேறு மொழிகளில் அமைந்த நல்ல திரைப்படங்களைக் காட்டி வருகின்றன. ஆனால், குறைந்த எண்ணிக்கையினரே இதன் மூலம் பயன்பெறுகின்றனர்.

இத்தகைய சூழலில் தற்போது இலவசமாக இங்கு நடைபெறும் 'சினி யாத்ரா' திரைப்பட விழா 'திரைப்படக் கலாசாரத்தைத் தோற்றுவிக்கும் ஆரம்பமாக அமையவேண்டும். இவ்விழாவிற்கு நாம் கொடுக்கும் போதிய ஆதரவு, எதிர்காலத்தில் மேலும் பல வேற்று மொழித் திரைப்பட விழாக்கள் இங்கு நடைபெற்று - எமது மக்களின் திரைப்பட ரசனையை மேம்படுத்துவதற்கு அடித்தளமாக அமையட்டும்.

இவ்விழாவில் திரையிடப்படும் படங்களை உருவாக்கிய சிங்கள நெறியாளர் அறுவரும் முக்கியமானவர்கள்; பல்வேறு விருதுகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றவர்கள்.

**1. லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்:-**

ஆரம்பத்தில் விவரணப் படங்கள் பலவற்றை உருவாக்கியவர். பின்னர் முழுநீளக் கதைப்படங்கள் பலவற்றைப் படைத்துள்ளார். கம்பெரலிய, நிதாணய, ஹொலு கதவத்த, தெலொவக் அத்தற ஆகியன அவற்றுள் சில. புதுடில்லியில் நடைபெற்ற 3ஆவது உலகத் திரைப்பட விழாவில் இவரது 'கம்பெரலிய' திரைப்படம் 'தங்க மயில்' விருதினைப் பெற்றது. வேறு படங்கள் பலவற்றுக்காக சர்வதேச விருதுகள் பலவற்றைப் பெற்றுள்ளார். சத்தியஜித்ரே, அகிரா குரோசாவா ஆகியோரின் வரிசையில் புகழ்பெற்ற இன்னொரு ஆசிரியராகவும் உள்ளார்.

**2. தர்மசேன பத்திராஜ:-**

இடதுசாரி கண்ணோட்டத்துடன் சமூக நிகழ்வுகள், மனித உறவுகளை கலாபூர்வமாகச் சித்திரித்துப் புகழ்பெற்றவர். சொல் தாது உண்ஹ, அகஸ் கவ்வ, பம்பரு அவித், பொன்மணி முதலியன முக்கிய படைப்புகள். மாற்றுத் தமிழ்ச் சினிமாவிற்குரிய பல அம்சங்களை பொன்மணி கொண்டுள்ளது. 1977வரை யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழி விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

**3. வசந்த ஒபேசேகர:-**

பிரான்ஸில் திரைக் கலைப் படிப்பை மேற்கொண்டவர். உண்மை நிகழ்வுகள், பத்திரிகைச் செய்திகளைக் கருப் பொருளாக வைத்து படங்களை உருவாக்கியுள்ளார். சூழ்நிலைகளால் மாறும் மனித நடத்தைகள், அன்பும் காதலும் குரூரமான வெறுப்பாக மாறுதல் போன்றவை வலுமிக்கவையாக இவரது படங்களில் வெளிப்படுகின்றன. பலங்கெற்றியோ, தடயம, வல்மத்வுவோ போன்ற முக்கிய படங்களை உருவாக்கியுள்ளார். கலைத் தரத்தையும் வெகுஜன ரசனையையும் இணைப்பதில் இவரது படங்கள் வியப்பூட்டும் விதத்தில் வெற்றி கண்டுள்ளன.

**4. தர்மசிறி பண்டாரநாயக்க:-**

நடிகனாகவும் நாடக நெறியாளராகவும் உள்ள இவர், ஹன்ச விலக், துன்வெனி ஜாமய, சுத்திலாகே கதாவ, பவதுக்க, கவகர்ம ஆகிய படங்களை உருவாக்கியுள்ளார். இவரது முதற்படமான ஹன்சவிலக் விமர்சகர்களின் மிகுந்த பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டது.

**5. பிரசன்ன விதானகே:-**

இரண்டு மொழிபெயர்ப்பு நாடகங்களைச் சிங்களத்தில் நெறிப்படுத்தியுள்ளார். சிசில கினிகணி, அனந்த ராத்திரிய, பவுரு வலலு, புரஹந்த களுவர ஆகிய நான்கு படைப்புகளை உருவாக்கியுள்ளார். பின்னிரு படைப்புகளுக்காக, முறையே 'ஏமியன்ஸ் சர்வதேச படவிழா'விலும் 'பிரிபோக் சர்வதேசப் படவிழா'விலும் விருதுகள் பெற்றுள்ளார்.

**6. அசோக ஹந்தகம:-**

சந்தகின்னரீ, சந்த் தடயம, மேமகே சந்த ஆகிய படங்களை உருவாக்கியுள்ளார். சந்த கின்னரீ "ஒரு தீவிரமான திரைப்படக் கலைஞனின் அபிலாசைகளையும் பாதச் சுவட்டையும் கொண்டுள்ள படம்" என விமர்சகர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.


தர்மசிறி


பிரசன்ன


ஹந்தகம

# கல்விக்குத் தொண்டாற்றியோருக்கு நியமனம் வழங்க பின்னடிப்பது ஏன்?

**1996** ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டு மக்கள் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம், தீவுப் பகுதி போன்ற பகுதிகளில் மீளக் குடியேறினர். அப்போது எமது பிள்ளைகள் தமது கல்வியைத் தொடர்வதற்குப் பல குறைபாடுகள் இருந்தன. அவற்றுள் மிகவும் பிரதானமானதாக வும் அவசியமானதாகவும் கணிக்கப்பட்டது ஆசிரியர் பற்றாக்குறையே.

முன்னர் இப்பகுதிகளில் கடமை புரிந்த ஆசிரியர்களில் கணிசமானவர்கள் 1995இல் நடந்த இடம்பெயர்வோடு கொழும்பு மற்றும் மாவட்டங்களுக்குச் சென்று அங்கே கடமை புரிந்தனர். இன்னும் சிலர் ஓய்வுபெற்றனர். இதனால் 1996இல் இங்குள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது.

எனவே, கல்வி பயிலும் சிறார்களுக்கு உதவும் முகமாகப் பாடசாலை அதிபர்கள் தங்கள் பகுதிகளில் இருந்த ஜி.சீ.ஈ உயர்தரம் சித்தியடைந்த இளைஞர்களை அழைத்து வகுப்புகளை நடத்த உதவுமாறு கேட்டனர். இவர்களுடைய உதவியினாலேயேதான் யாழ்.மாட்டத்தில் 1996இல் அநேகமான பாடசாலைகள் குறிப்பாக கிராமப்புறப் பாடசாலைகள் இயங்கக்கூடியதாக இருந்தன. இந்த உண்மையை யாவரும் மறுப்பதற்கில்லை. அந்த நாள் முதல் இந்த நாள் வரை - சுமார் ஆறு ஆண்டுகள் - எதுவித ஊதியமும் இல்லாமல் கல்வித்தொண்டு செய்து வருகின்றார்கள் அவர்கள். இந்த விடயம் கல்விபயிலும் மாணவர்களின் பெற்றாராகிய எங்களுக்கும் அதிபர்களுக்கும் மட்டுமல்ல அரசாங்கத்திற்கும் நன்றாகத்தெரியும்.

2000ஆம் ஆண்டு இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவென இரண்டு நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன. இதில் நிரந்தர நியமனம் வழங்கத் தகுதியான 406 ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்களது பெயர் விவரங்களை யாழ். கல்வி வலயங்களுக்கு அனுப்பிவைக்க திருமலை கல்வி அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொண்டதாக அறிந்தோம். ஆனால், அந்த நிரந்தர நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை.

**கிராமப்புற மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில்**
**சி.கனகசபை**

இத்தொண்டர் ஆசிரியர்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக இப்பகுதிக் கல்வி வளர்ச்சிக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்கள். இவர்களின் நிலையை நாங்கள் மிகவும் மனவேதனையோடுதான் பார்க்கின்றோம்.

இவர்கள் நிரந்தர ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்பும் அதேநேரம், வேதனம் ஒன்றும் இல்லாமல் கடமை புரிவது கல்வித் துறையில் உயர் அதிகாரிகளுக்குத் தெரியாதா? தகுதியான இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் புதிய அரசாங்கமும் இதுவரை அர்த்தமுள்ள ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆயிரம்




தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பத்திரிகைகளில் படித்தோம் அவ்வளவுதான்.

கிராமப்புற பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதில் தொண்டர் ஆசிரியர்கள் பெரும் பங்கு ஆற்றி வருவதை நாம் அறிவோம். ஆண்டு தோறும் ஆசிரியர் தினத்தன்று தொண்டர் ஆசிரியர்களுக்கு மாலை, மரியாதை மட்டும் செய்தால் போதுமா?

ஆகவே, கல்வி அமைச்சரும், அதிகாரிகளும் தொண்டர் ஆசிரியர்கள் கல்விச்சேவைக்கு ஆற்றிய இலவச சேவையைக் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட்ட தகுதியான தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி அவர்களின் மனவிரக்தியை நீக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

# இளைஞர்களுக்கு தொழில்சார் பயிற்சி

தென்மராட்சி,மார்ச்29

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப் பிரிவினர் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம ஆகிய பிரதேசங்களில் இளைஞர்களுக்கான தொழில்சார் பயிற்சி நெறிகளை விரைவில் நடத்தவுள்ளனர்.

கட்டுமானம், மரவேலை, மின் இணைப்பு, எள் எண்ணெய் தயாரித்தல், ஒட்டுநர் போன்ற பயிற்சி நெறிகள ஏப்ரல் மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் தலா 80 பயனாளிகள் வீதம் 400 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

வடமராட்சி பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளிலும், தென்மராட்சியில் சாவகச்சேரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் வலிகாமம் பிரதேசத்தில் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் யாழ்ப்பாண பிரதேசத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளிலும் தீவகத்தில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்தப்படும் கட்டுமானம், மரவேலை, மின் இணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளுக்கு சாவகச்சேரி பிரதேசத்திலிருந்து தலா 20 பயனாளிகளுக்கும் பளைப் பிரதேசத்திலிருந்து கட்டுமானம், மரவேலை ஆகிய பயிற்சிநெறிகளுக்கு தலா 10 பயனாளிகளும் இணைக்கப்படல் வேண்டுமென யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-117)

# மாணவருக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

சண்டிலிப்பாய்,மார்ச்29

கொழும்பு நகர லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் தென்மராட்சிப் பகுதி மாணவர்களுக்கு சீருடைகள், புத்தகப் பை, குடை, அப்பியாசக் கொப்பிகள், தண்ணீர் போத்தல்கள் உட்பட பல்வேறு பாடசாலை உபகரணங்களை வழங்கும் வைபவம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமையன்று சாவகச்சேரியில் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் இப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன என மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் செயலாளர் செ.கேசவராஜன் தெரிவித்தார்.

(ஓ-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதியரக வல்லாரை நாற்றுக்கள், மருத்துவ தேவைக்கு ஏற்ற வல்லாரை கழிவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.கணேசு (ராசா - CTB), டச்வீதி, மானிப்பாய். (16080)

நல்லின காவலுக்குரிய 1 1/2 வயதுடைய தடுப்பு ஊசிகள் போடப்பட்ட அல்சேஷன் ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: 65, குறுக்கு வீதி, நல்லூர். (16077)

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. உயிர் நிறை 1Kg - 130/-, சுத்தம் செய்யப்பட்டவை. 1kg 190/- வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (16077)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg 120/- சுத்தம செய்தல் இலவசம். மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (15898)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் வேண்டிய நிறைகளில் உயிருடனும், இறைச்சியாகவும் பெற்றுக்கொள்ளலாம். இல.205/1, ஆசீர்வாதம் ஒழுங்கை (சந்தி), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (16032)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Broiler கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(16069)

## கோழி தடுப்பு மருந்து

Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 8.00 மணிக்கு விநியோகிக்கப்படும். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15813)

## மணமகன் தேவை

கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1975 இல் பிறந்த, மிருகசீரிடம 7இல் செவ்வாய், கிரகபாவம் 9 உடைய வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பெண்ணுக்கு அரசாங்கத் துறையில் அல்லது வெளிநாட்டில தொழில்புரிகின்ற மணமகன் தேவை. முழுவிவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1829, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (15950)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராயில் வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணியும் மானிப்பாய் கட்டுடையில் வீட்டுடன் கூடிய 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: போதகர் இராஜசூரியர் T.P.:222 3204. (15969)

'சித்திரகிரி' சூராவத்தை சுன்னாகம் என்ற இடத்தில் 5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P), ஏழாலை மேற்கு, ஏழாலை. (16059)

கந்தரோடை சுன்னாகத்தில் விஸ்தீரணமான காணியும் வீடும் விற்பனைக்குள்ளது. தொடர்புகளுக்கு: 08/385595 (சி-27037)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16068)

## வான் விற்பனைக்கு

நிஷான் வான் ஒன்று விற்பனைககு உண்டு. தொடர்பு: நவநீதன் மணியகாரன் வளவு, மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (16041)

## தவறிவிட்டது

முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த சிவஞானம் - இராவணன் என்பவரது தொழில் அடையாள அட்டை (இல.763393984V) 26-03-2003 புதன்கிழமை சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் K.K.S. வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொற்றோலியம் கூட்டுத்தாபனம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (16045)

மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த ந.சிவகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.583200118V), வாகன அனுமதிப்பத்திரம் இல.412508, விசேட அடையாள அட்டை 0903032507 என்பவை கன்னாதிட்டியில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (16064)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (தனிப்பாவனை) M.D. 90 (Honda) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: செ.ரவிச்சந்திரன்
நாகதம்பிரான் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
T.P.: 071-355133 (16070)

---

*கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.* (வ-து)

## விசேட பொதுக்கூட்டம். (08.04.2003)

எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 08.04.2003 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 11 மணிக்கு சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும். நிகழ்ச்சி நிரல்கள் பிரதிநிதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. முகவரி மாற்றங்களினாலும் ஏனைய காரணங்களினாலும் அழைப்பு கிடைக்காவிடினும் சங்கத்தின் வளர்ச்சி கருதி தவறாது சமுகமளிக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

பூ.பாலசிங்கம்
*தலைவர்,*
*ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*கொடிகாமம்.*

கி.மணிவண்ணன்,
செயலாளர்.
- (16078)

---

# பாராட்டி வாழ்த்து



கொடிகாமம் வடக்கு
கிராம உத்தியோகத்தர் J/326
உயர்திரு.
**சுப்பிரமணியம் தங்கமயிலோன்**

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவர்களின் சமூக சேவை, விவசாய அபிவிருத்தி, ஆத்மீக வழிபாடுகள் மற்றும் சிறுவர், முதியோர், ஆதரவற்றோர், விதவைகளுக்கான உதவிகள், ஆதரவுகளை வழங்குவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர்களின் சேவை மேன்மேலும் தொடர மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

*ன்மராட்சி கி[illegible] [illegible]டிகாம[illegible]* *உநோ.கூ.ச.* *கூட்டுறவுச் சங்க*
**ஊழியர்களும், நண்பர்களும்.**
([illegible]074)

---

## சுற்றறிக்கை கிடைத்தது

தென்மராட்சி, மார்ச்29

அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணக் கொடுப்பனவுத்தொகை ரூபா 2ஆயிரத்திலிருந்து மூவாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக சுற்றறிக்கை யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களுக்கு கிடைகக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை -

பல திணைக்கள அலுவலகங்களில் போதிய நிதி இல்லாததால் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்தக் கொடுப்பனவினை வழங்க முடியாத நிலை உள்ளதாகத தெரிவிக்கப்பட்டது.

இன்னும் பத்து தினங்களுக்குள் இக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-117)

## திருமறைக் கலாமன்றத்தில் திருப்பாடுகளின் காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்.திருமறைக் கலாமன்றம் வழங்கும் தவக்கால ஆற்றுகை 'பலிக களம்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் நான்கு நாள்களுக்கு இடம் பெறவுள்ளது.

நான்கு நாள்களும் மாலை 7மணிக்கு மன்ற அரங்கில் ஆற்றுகை இடம்பெறும்.

இதேவேளை-

திருமறைக் கலாமன்றத்தின் கல்வாரி இராகங்கள் - III பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றக் கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு தவக்காலத்தில் மேடையேற்றப்பட்ட 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சிப் பாடல்களை உள்ளடக்கிய இந்த ஒலிப்பதிவு நாடாவின் மதிப்பீட்டுரையை மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்திரு. மௌலிஸ் அடிகளார் நிகழ்த்துவார். (எ-9)

## விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கற்கள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்பு* **இ.சேகர்**
இல.162, அரசடி வீதி, நல்லூர்.
*(டயானா கொமினிக்கேசன் முன்பாக)*
T.P.3146 (16075)

## தேவை

கணனி பயிற்றுநர் தேவை.
சகல ஆவணங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
**சைன்**
உடுவில். (16037)

## விற்பனைக்கு

புத்தம் புதிய LML SelectII
(மணிக்கூடு பதித்த,
சொக்கிலட் கலர்)
விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.தர்மலிங்கம்,
டச்சுறோட்,
இருபாலை. (16037)

## ஒப்பறேற்றர் தேவை

அச்சுவேலியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தியேட்டருக்கு ஒப்பறேற்றா (Operator) தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும்.
தொடர்பு: லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
T.P. : 070-212223 (16037)

## ஜோ - எகட்டனின்

புதிய அறிமுகம்--- யாழ்நகரில்!
"மொதுல் புரியாணி"
சிக்கன் மசாலாவுடன்
விலை ரூபா 150/- மட்டுமே!
பார்சல் ஒன்றுக்கு ஒரு
பொக்கட் கலண்டர்.
விரையுங்கள்... மனைக்கு
வெளியே ஒருமனை...
**ஜெசித்தாரா**
**உங்கள் உணவகம்**
வழமையான உணவுப் பொதிகள்
வழமைபோல.
எங்கள் தொலைபேசி இல. :
071-399186, 0777 032188
*1/3,மகாரி கல்லூரி முன்ஒழுங்கை,*
*சுண்டிக்குளி.* (சி-27020)

---

# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சு
## கட்டடத் திணைக்களம்

1. யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட கட்டம் 11 (PHASE I) விரிவுரை மண்டப பூர்த்தி நிர்மாணம் மற்றும் நிர்வாக நூலக கட்டட நிர்மாணத்திற்கான பொறியிடப்பட்ட கேள்விகளை கட்டடத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர், 2003.04.24ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை கோருகின்றார்.
2. கேள்வி ஆவணங்கள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் 2003.04.11ஆம் திகதி பி.ப.3.30 மணிவரை மீளளிக்கப்படாத ரூ.1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக பத்தரமுல்ல, செத்சிரிபாய, இரண்டாம் மாடி, கட்டடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர் அல்லது அவர்களுடைய அங்கீகாரம்பெற்ற முகவர்கள் சமுகமளிக்கலாம்.
4. கேள்விப் படிவங்கள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் (ICTAD) M5 மற்றும் அதற்கு மேல் பதிவுசெய்து கொண்ட மற்றும் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற (NCASL)கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படும். கேள்வி ஆவணங்கள் வழங்கப்படு முன்னர் விண்ணப்பதாரியினால் ஒப்பந்தகாரர்கள் பதிவுப் புத்தகம் மற்றும் NCASL அங்கத்துவ அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பத்திரமுல்ல, கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர, "செத்சிரிபாய", கட்டடங்கள் திணைக்களம், கேள்விச் சபைத் தலைவரிடம் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பமுடியும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதாகையால் பாதுகாப்புச் சோதனை நிமித்தம் கேள்வி மூடப்படும் நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னரே செத்சிரிபாய வளவுக்குள் பிரவேசிக் குமாறு கேட்கப்படுகின்றார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடத் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏ.டீ.விக்கிரமசிங்ஹ
பணிப்பாளர்,
கட்டடத் திணைக்களம்,
"செத்சிரிபாய", ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல. (சி-27036)

---

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராஜதுரை

திருநெல்வேலி, அம்மன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜதுரை (முன்னாள் மரவேலைக் கூட்டுத்தாபன முகாமையாளர், சுன்னாகம்) அவர்கள் நேற்று (28.03.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (பிரான்ஸ்), முகுந்தன் (ஓமான்), ஜெயலட்சுமி, பிரபாகரன், ஜெயகௌரி, கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பவளம், பாக்கியம் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் நல்லம்மா, கமலாம்பாள், லோகாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலவதனம், கௌரி(ஆசிரிய ஆலோசகர், யாழ்.கோட்டம்), உதயரட்ணம், யோகேஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி (ஆசிரியர் யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), துர்க்கா அகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, கீர்த்திகா, பிரியங்கா, கேதாரன், சங்கீர்த்தன், அபர்ணா, யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* 16071)

தகவல்:
இ.பிரபாகரன் (பிரான்)
(மகன்)

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (மூப்பர்)

சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (மூப்பர்) அவர்கள் கடந்த (22.03.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - விக்ரோரியா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோசப் - வரோனிக்கா தம்பதியினரின் அன்பு மருமகனும் திரேசம்மா (றெஜினா) வின் அன்புக் கணவரும் அஞ்சலா, ஜெயா, ஜெறா (பிரான்ஸ்), கமலா, திலகம் (கொலண்ட்), பிறேமா, அருந்ததி (கனடா), அழகு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற ஜேசுராஜா காலஞ்சென்ற சின்னத்தம்பி, பவானி (பிரான்ஸ்), அன்ரன் யோசவ் (கொலண்ட்), ராசு, சூசைதாஸ் (கனடா), டொறின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சூசைப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்), மேரிப்பிள்ளை, காலஞ்சென்ற எலிசபெத் மற்றும் மொனிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரரும் அழகுராணி, ராசு, ராசா, சவரிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (29.03.2003) சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*89/7, பீச்றோட்,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (16081)

தகவல்:
அஞ்சலா (மகள்)

சம்பவம் இடம்பெற்ற அடுத்தநாள்

# மகன் வீட்டுக்கு வந்தபோது அவரது முகம் வீங்கியிருந்தது

## மிருசுவில் கொலை வழக்கில் முக்கிய சாட்சியின் தாயார் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்29

டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி மகன் வீட்டுக்கு வந்தபோது அவரது முகம் வீங்கியிருந்தது. அவர் மிகவும பயந்த நிலையில் இருந்தார்.

மிருசுவில் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த பொன்னுத்துரை லட்சுமி மேற்கண்டவாறு தெரிவித்தார். வழக்கின் முக்கிய சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரனின் தாயாரான லட்சுமி சாட்சியமளித்தபோது அவரை அரச தரப்பு சிரேஷ்ட சட்டவாதி சரத் ஜயமான குறுக்கு விசாரணை செய்தார்.

*கேள்வி:-* நீங்கள் பிறந்த ஊர் எது?

*பதில்:-* மிருசுவில்

*கேள்வி:-* மிருசுவிலில் எவ்வளவு காலமாக வசிக்கிறீர்கள்?

*பதில்:-* பிறந்தநாள் முதல்.

*கேள்வி:-* தங்கள் கணவரின் பெயர்?

*பதில்:-* கந்தையா பொன்னுத்துரை.

*கேள்வி:-* பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் தங்களது மகனா?

*பதில்:-* ஆம்

*கேள்வி:-* 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் எங்கிருந்தீர்கள்?

*பதில்:-* மிருசுவிலில்.

*கேள்வி:-* 2000ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி எங்கிருந்தீர்கள்?

*பதில்:-* நெல்லியடியில்.

*கேள்வி:-* நெல்லியடி எங்கிருக்கிறது?

*பதில்:-* கரவெட்டியில்.

*கேள்வி:-* கரவெட்டி வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

*பதில்:-* எனது கணவர் கந்தையா பொன்னுத்துரை, மகன் பொன்னுத்துரை மகேஸ்வரன், செல்வராணி, மயூரன், நான்.

*கேள்வி:-* டிசெம்பர் 19ஆம் திகதி காலை உங்கள் மகன் வீட்டை விட்டுப் போனது உங்களுக்குத் தெரியுமா?

*பதில்:-* மகன் போகும்போது என்னிடம் சொல்லவில்லை. கணவர் தான் என்னிடம் கூறினார்.

*கேள்வி:-* 20ஆம் திகதி காலை தங்கள் கணவருடன் வந்த மகன் எப்படி இருந்தார்?

*பதில்:-* முகம் வீங்கி மிகவும் பயந்த நிலையில் இருந்தார்.

*கேள்வி:-* அவரிடம் எதுவும் கேட்டீர்களா?

*பதில்:-* நான் ஒன்றும் கேட்கவில்லை. அப்போதைய சூழ்நிலையில அவர் எதுவும் சொல்லமாட்டார் என நினைத்தேன்.

*கேள்வி:-* தங்கள் மகனுடன் சென்ற மருமகன், பேரன் ஆகியோர் பற்றி எதுவும் தெரிந்துகொள்ள முயற்சி எடுத்தீர்களா?

*பதில்:-* எனது கணவர் என்னிடம் நடந்த சம்பவத்தைக் கூறினார்.

*கேள்வி:-* மகனுடன் சென்ற ஏனையோருக்கு என்ன நடந்தது என கணவர் உங்களிடம் ஏதும் கூறினாரா?

*பதில்:-* எல்லோரையும் பாம் தோட்டத்தில் இராணுவம் பிடித்திருப்பதாகவும் எனது மகன் தனக்கு வெடி பட்டாலும் பரவாயில்லை என்று தப்பித்து ஓடிவந்து விட்டதாகவும் கணவர் கூறினார்.

*கேள்வி:-* உங்கள் மருமகனையும் பேரனையும் கடைசியாக எப்போது கண்டீர்கள்?

*பதில்:-* டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி கண்டேன். அதற்குப் பிறகு அவர்களை சடலங்களாக டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி பருத்தித்துறை வைத்தியசாலையில் கண்டேன். (எதிர்த்தரப்பு சட்டத்தரணி அனில் சில்வா சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்)

*கேள்வி:-* டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி உங்கள் மகன் வீட்டை விட்டுச் சென்ற சிறிது நேரத்தில் உங்கள் மருமகன் ஞானச்சந்திரனும் பேரன் பிரசாந்தனும் உங்கள் வீட்டிற்கு வந்தார்களா?

*பதில்:-* மருமகன் வரவில்லை. பேரன் வந்திருந்தார்.

*கேள்வி:-* ரவிவர்மா என்பவர் வந்தாரா?

*பதில்:-* எனக்குத் தெரியாது.

*கேள்வி:-* டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி உங்கள் மகன், கணவருடன் வீட்டிற்கு வந்தபோது மகனிடம் எதுவும் கேட்கவில்லையா?

*பதில்:-* நான் எதுவும் கேட்கவில்லை.

*கேள்வி:-* மகனுக்கு ஏதோ ஒரு சம்பவம் நடந்திருப்பதாக உங்களுக்குத் தெரியும். ஒரு தாய் என்ற வகையில் மகனுக்கு என்ன நடந்தது என்றாவது ஏன் கேட்கவில்லை?

*பதில்:-* அப்போது மகன் இருந்த சூழ்நிலையில் அவர் எதுவும் சொல்லமாட்டார் என நினைத்தேன்.

*கேள்வி:-* மகன் உங்களிடம் எதுவும் சொல்லவில்லையென்று நீங்கள் கூறுவதும் மகனிடம் எதுவும் கேட்க வேண்டாம், நடந்ததை எல்லாம் நான் சொல்கிறேன் என்று கணவர் கூறியதாக நீங்கள் சொல்வதும் பொய்.

*பதில்:-* இல்லை, அதுதான் உண்மை.

விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. (எ)

# நடந்த சம்பவங்களைக் கூறவேண்டாம் என்று முதலில் சாட்சியமளித்தவர் என்னிடம் கூறினார்

## உடதலவின்ன படுகொலை வழக்கில் சாட்சி சிவஞானம் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்29

இந்த வழக்கில் முதலில் சாட்சியமளிக்க வந்தவர், நடந்த சம்பவங்கள் ஒன்றையும் கூறவேண்டாம், நாளை ஆட்சி மாறினால் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுவிடும் என்று கூறினார். அப்படிக் கூறியவர் பொய்ச் சாட்சியம் அளித்திருக்கிறார். தற்போது விளக்கமறியலில் இருக்கிறார்.

உடதலவின்ன படுகொலை வழக்கு விசாரணையின்போது நேற்று முன்தினம் சாட்சியமளித்தபொலீஸ் கான்ஸ்டபிள் சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஸிக் பஸநாயக்கா, சுனில் ராஜபக்ஸ, தீபாலி விஜயசுந்தர ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

பொல்கொல்ல வாக்குச்சாவடியில் நான் கடமையாற்றும்போது அங்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்போது, கடமையில் ஈடுபட்டிருந்த குசும் சிறி என்பவர் - வாகனத்தில் வந்தவர்களோடு, வாக்குவாதம் செய்யவேண்டாம் என்று என்னிடம் கூறினார்.

வாக்குப்பெட்டிகளைக் கொண்டு சென்ற பஸ்ஸின் பின்னால் வந்த வாகனமொன்றில் இருந்தவர்கள் வீடியோ படம் எடுத்தவாறே வந்தனர். அந்த வாகனத்தில் ரவூப் ஹக்கீமின் படம் காணப்பட்டது.

- இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

திக்லேவ்லூட் கல்லூரியின் உப அதிபர் விஜயசூரிய ஆராச்சிகே சுகத் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தின்போது கூறியதாவது:-

மீகஹளவத்த வாக்குச் சாவடியில் கடமைக்கா நான் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதியே சென்றேன். அன்று இரவு முழுவதும் அப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்கு வாக்களிப்பதற்கு மக்கள் வரத் தொடங்கினர்.

சுமார் 10 நிமிடங்களே சுமுகமாக வாக்களிப்பு நடைபெற்றது. காலை 7.10 மணியளவில் வாகனமொன்றில் வந்தவர்கள், எல்லோரையும் ஓடி விடுமாறு கூச்சலிட்டனர். ஒருவரையும் வாக்களிக்க விடவில்லை.

வந்தவர்கள் அனைவரும் ஆயுதங்கள் வைத்திருந்தனர் என்று சாட்சி மேலும் தெரிவித்தார். (ம)

# இந்துமாநாட்டை முன்னிட்டு சிறப்பு மலர்கள் வெளியிடப்படும்!

## இந்துகலாசார அமைச்சு அறிவிப்பு

இந்துசமய விவகார அமைச்சு எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதிமுதல் ஆறாம் திகதிவரை நடத்தவுள்ள இரண்டாவது உலக இந்துமாநாட்டின்போது சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது.

தமிழிலும் ஆங்கிலத்திலுமாக தனித்தனியே வெளிவரவுள்ள இச் சிறப்பு மலரில் இலங்கை, இந்தியா உட்பட ஏனைய நாடுகளின் அறிஞர்கள் பலரும் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக்கட்டுரைகள் இந்துசமயம், இந்துதத்துவம், இந்துப் பண்பாடு, இந்துக்கலை என்பன தொடர்பாக பல்வேறு தலைப்புகளில் அமையும். முக்கியமாக, சைவ சித்தாந்தம், இலங்கையில் இந்து சமயம், இந்து சமயத்தின் சமகால நிலைமை என்பன குறித்து விசேட கவனம் செலுத்துவனவாக, பல கட்டுரைகள் அமையும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும், வெளியிலும் உள்ள அறிஞர்கள் பலரைக்கொண்ட மலர்க் குழு மலரைத் தொகுத்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுவருகின்றது.

மலரின் ஆங்கில வெளியீட்டின் வேலைகளை அமெரிக்க அறிஞரான பெட்ரிக் ஹரிகன் பொறுப்பேற்றுக் கவனித்து வருகிறார்.

இவ்விரு சிறப்பு மலர்களும், மாநாட்டின்போது வெளியிடப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

புதிய படைமுகாம் அமைக்கும் விவகாரம்

# விநாயகமூர்த்தி எம்.பி. பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்நகரில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் இராணுவத்தினரை நிலைகொள்ள வைப்பதற்காக முகாம் அமைக்கப்படுவதற்கு யாழ்.மாவட்ட எம்.பியான அ.விநாயகமூர்த்தி கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

தமது ஆட்சேபத்தை அவர் கடிதம் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்திருக்கிறார்.

யாழ்.மாநகரசபை, தனது பழைய இடத்துக்குத் திரும்பவும் வரப்போகிறது.

அது மட்டுமல்ல, யாழ்.நகர மத்தியில் பொது நூல் நிலையமும் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களும் உள்ள இடத்தில் இராணுவ முகாமை அமைப்பது புத்திசாலித்தனமானதோ, ஏற்றுக்கொள்ளக்கூடியதோ அல்ல என்றும் விநாயகமூர்த்தி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த விடயம் குறித்து நேரில் உரையாடும் விநாயகமூர்த்தி பிரதமரிடம் கேட்டுள்ளார். (எ-3)

### பரிசளிப்பும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்திய 'அழகெழில்' போட்டியின் பரிசளிப்பு விழாவும், கண்காட்சியும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அ.ஜெயதீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார். தொழில் அதிபர்களான கே.வி.கிருஷ்ணபிள்ளை, நா.தெய்வேந்திரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ-5)

### பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

வடமாகாண ஆசிரியர் சங்கச் சகாயநிதியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-5)

# மருதனார்மடம், சங்கானையில் நவீன சந்தைகள் நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்29

மருதனார்மடம், சங்கானை ஆகிய இடங்களில் நாலுகோடி ரூபா செலவில் நவீன சந்தைகள் அமைக்கப் படவிருக்கின்றன.

இந்து கலாசார அமைச்சின் கோரிக்கையை ஏற்று கிராமிய பொருளாதாரத்துறை அமைச்சு இந்த சந்தைகளை அமைக்கவிருக்கின்றது.

இன்று யாழ்ப்பாணம் வரும் இந்த அமைச்சின் தொழில்நுட்ப நிபுணர்கள் குழு சந்தை அமையவிருக்கும் இடங்களுக்குச் சென்று, கட்டட வரைபடங்களைத் தயாரிக்கத் தேவையான தகவல்களைச் சேகரிக்கும்.

அதன்பின்னர் இக்குழு உடுவில் கமநலசேவை நிலையத்தில் விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறியும்.

இக்குழுவில் கட்டடக்கலை நிபுணர் பி.எஸ்.அமரதுங்க, பொதுமுகாமையாளர் நிஹால் ரூபசிங்க, கட்டடக்கலை பொறியியலாளர் லலித் குமாரகே, மண்ணியில் நிபுணர் ஏ.ஜி. மாப்பா ஆகியோர் இடம்பெறுகின்றனர். (எ-3)

# 2 வருட ஆசிரியப் பயிற்சிக்கு கல்வி அமைச்சு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

ஆசிரிய கல்லூரிகளில் ஈராண்டு ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைத் தொடர்வதற்காக தகுதியுடைய உரிய நியமனம் (கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் அல்லது மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட)பெற்று, மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற பயிற்றப்படாத ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட, அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ள தனியார் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களும் பிரிவெனா ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தனியார் பாடசாலைக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தொலைக் கல்வி/பிரின்செட் ஆசிரிய பயிற்சியை பின்பற்றி சித்தியடையாத ஆசிரியர்களும் ஆசிரிய கலாசாலை பயிற்சிக்காக விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப் பரீட்சையின்போது இது பற்றி உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்று தொலைக் கல்வி பயிற்சி அலுவலரின் கையொப்பத்துடன் முன்வைக்கப்படல் வேண்டும். இவ்வாறான பயிற்சி வழங்குவதற்கான இறுதித் தடவை இதுவேயாகும்.

ஆசிரிய கல்லூரிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப பாடசாலையில் கடமையேற்றுள்ள சேவை மூப்பின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

இப்பாடநெறி ஈராண்டு காலத்தைக் கொண்டதாகும். மாணவ மாணவியர்கள் இந்த ஈராண்டு காலத்திலும் பூரண கால வதிவிடத்துடனான நிறுவனசார் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். வதிவிட வசதி இல்லாதிருந்தால் அல்லது இடவசதி போதுமானளவு இல்லாதிருந்தால் மாத்திரம் ஆசிரிய கலாசாலைக்கு மிக அருகிலுள்ள வதிவிட வசதியைப் பெறுவதற்கு இடமளிக்கப்படும். இதற்கு அதிபரிடமிருந்து எழுத்து மூலம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆசிரிய கலாசாலையில் பயிற்சியைப் பெறும் காலத்தில் வேறு பாடநெறிகளைத் தொடர்வதோ வேறும் வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதோ கூடாது - என்று மனித வள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை - மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப் படிவத்தை யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் பார்வையிடலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மக்கள் முகம்



கரவெட்டி மத்தியைச் சேர்ந்த சிற்றம்பலம் சிதம்பரநாதன் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் எஸ்.அரியநாயகம் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக ஆணையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்.இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரும் கூட. (எ-70)

★ ★ ★ ★



யாகோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஜி.சீ.ஈ.உயர்தர கலைப்பிரிவு மாணவி செல்வி கோபிகா துரைராஜா, மகளிர் விவகார அமைச்சினால் சர்வதேச மகளிர்தினம் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவிகளிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் உயர்தரப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான சான்றிதழும் பரிசில்களும் கடந்த 08.03.2003 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மகளிர்தின விழாவில் வைத்து வழங்கப்பட்டன.(எ)

★ ★ ★ ★



யாழ்.சைவ பரிபாலன சபை புண்ணிய நாச்சியம்மையார் நினைவுதினத்தை முன்னிட்டு அண்மையில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பண்ணிசைப் போட்டியில மேற்பிரிவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி செல்வி துஷ்யந்தினி துரைசிங்கம் முதலாம் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தெல்லிப்பழை, துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்தவர். (எ-135)

★ ★ ★ ★



பருத்தித்துறை, கற்கோவளத்தைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தி யோகத்தர் எஸ்.சோமசுந்தரம்,யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் குச்சவெளி, நிந்தவூர் பிரதேச சபைகளின் நிர்வாக உத்தியோகத்தராகவும் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபையின் உள்ளகக் கணக்காளராகவும் பணியாற்றி இளைப்பாறியுள்ளார். (எ-173)

# இலங்கை கிரிக்கெட் வீராங்கனைகள் நாடு திரும்பியதும் கடும் நடவடிக்கை!

"லண்டனில் தலைமறைவான இலங்கை கிரிக்கெட் வீராங்கனைகள் மூவரும் நாடு திரும்பியவுடன் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

- இவ்வாறு இலங்கை மகளிர் கிரிக்கெட் சங்கத்தின் தலைவி கெவின் ஹேரத் கூறியுள்ளார்.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்த வீராங்கனைகள் பிரிட்டனில் தங்கியிருப்பதற்கான விஸா பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி, மேற்கிந்திய சுற்றுலாவின் பின் நாடுதிரும்புகையில் அணித் தலைவி சுதர்ஷினி சிவநாதன், ரமணி பெரேரா, ஹிரோஷி அபேசிங்க ஆகிய மூவரும் லண்டன் விமானநிலையத்தில் திடீரென காணாமல் போயினர்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், இம் மூவரும் இங்கிலாந்தில் தங்கியிருப்பதற்கான விஸாவைப் பெற்றுள்ளனர் எனவும் அவர்கள் அந்த நாட்டுக் குடிவரவுச் சட்டத்தை மீறவில்லையெனவும் தெரிவித்துள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கெவ்ன ஹேரத் கூறுகையில் -

"இவ்வீராங்கனைகள் மூவரும், விஸாமுடிந்தவுடன் இலங்கைக்குத் திரும்புவர் அல்லது நாடுகடத்தப்படுவர். இலங்கைக்குத் திரும்பியவுடன் அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேவேளை, இலங்கை உயர்ஸ்தானிகராலயம், விளையாட்டுத்துறை அமைச்சு, வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றுடன் நாம் தொடர்ந்தும் தொடர்பு கொண்டிருக்கிறோம்"

-என்றார். (ம)

# பங்களாதேஷ் தொடரிலிருந்து டெண்டுல்கர் – கங்குலிக்கு ஓய்வு?

பங்களாதேஷில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில் டெண்டுல்கர், கங்குலி ஆகியோர் விளையாட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி அடுத்த மாத தொடக்கத்தில் பங்களாதேஷுக்கு செல்ல இருக்கிறது. தென்னாபிரிக்கா உட்பட 3 அணிகள் மோதும் கிரிக்கெட் தொடரில் இந்தியா கலந்து கொள்ளவுள்ளது.

இந்தப்போட்டியின் போது சிரேஷ்ட வீரர்கள் சிலருக்கு ஓய்வு கொடுப்பதற்கு இந்திய கிரிக்கெட்சபை முடிவு செய்திருக்கிறது.

உலகக் கிண்ணத்திற்கு முன்பிருந்தே இந்திய அணி பல்வேறு போட்டிகளில் ஆடியது. உலகக்கிண்ணம் 50 நாள்களுக்கும் மேலாக நடந்ததால் வீரர்கள் அதிக களைப் படைந்துள்ளனர்.

இதனால் டெண்டுல்கர், கங்குலி, திராவிட் ஆகியோர்களுக்கு ஓய்வு கொடுக்க சபை முடிவு செய்திருக்கிறது.

இது பற்றி டெண்டுல்கர் கூறும் போது, "இன்னும் சில நாள்கள் குடும்பத்துடன் ஓய்வு எடுக்க விரும்புகிறேன்" என்றார். இந்திய அணித் தலைவர் கங்குலியும் அதே கருத்தைத் தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தின் போது திராவிட்டின் கையில் காயம் ஏற்பட்டது. இதனால் திராவிட்டும் ஓய்வு எடுக்கும் மனநிலையில் இருக்கிறார்.

பங்களாதேஷ் சுற்றுலாவுக்கு புதிய அணித்தலைவரை தேர்வு செய்யும் கருத்துக்கு பலத்த வரவேற்பும் கிடைத்துள்ளது. முக்கியமான பல போட்டிகள் இந்த ஆண்டு நடக்கவிருப்பதால் இப்போதே இந்திய வீரர்களுக்கு ஓய்வு கொடுப்பது சிறந்ததென்று கருதப்படுகிறது.

இதனால் பங்களாதேஷ் பயணத்துக்கு புதிய தலைவர் நிச்சயம் தேர்வு செய்யப்படுவர் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. அநேகமாக சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தலைவராகத் தேர்வு செய்யப்படுவார் என்று தெரிய வந்துள்ளது. ஷேவாக் உப தலைவராக தேர்வு பெறவும் வாய்ப்புள்ளது. (ம)

## கிரிக்கெட் பயிற்சியாளர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்29

கிரிக்கெட் பயிற்சியாளர் தரம் II இற்கான பயிற்சி அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. எனவே, மேற்படி பயிற்சியாளர்கள் தரம் I இல் சித்தியடைந்த அனைவரையும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.அருண்ஸ் ஸ்போட்ஸ்பொட்டில் மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவரை சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்29

உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ஆ.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்வார். (ம-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4மணி - சென். அன்ரனீஸ் வி.க. எதிர் எவறஸ்ட் வி.க.

★ பிற்பகல் 5.15 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யூனியன் வி.க. அணி. (ம-5)

## பாகிஸ்தான் சுற்றுலா ரத்தானமைக்காக

# நியூஸிலாந்து நஷ்டஈடு வழங்கத் தேவையில்லை

## ஐ.சி.சி. அறிவிப்பு

பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை பாதியிலேயே ரத்துச் செய்ததற்காக அந்நாட்டுக்கு, நியூஸிலாந்து கிரிக்கெட் அணி நஷ்டஈடு வழங்க வேண்டியதில்லை என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி 2001 செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தான் பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் ஆடத் திட்டமிட்டிருந்தது. அந்த நேரத்தில் அமெரிக்கா மீது தீவிரவாதத் தாக்குதல் நடந்ததால், பயணத்தை நியூஸிலாந்து ஒத்திவைத்தது. அதன பின்னர் கடந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தானுக்குச் சென்றது.

அப்பொழுது கராச்சியில் அந்த அணி தங்கியிருந்த ஹோட்டல் அருகே நடந்த படு பயங்கர குண்டுவெடிப்பில் 14 பேர் பலியானார்கள்.

இதனால் சுற்றுலாவை ரத்துச் செய்துவிட்டு நியூஸிலாந்து அணி தாயகம் திரும்பியது.

சுற்றுப்போட்டிகள் பாதியிலேயே ரத்தாகிவிட்டதால் எமக்குக் கோடிக்கணக்கான ரூபா இழப்பு. ஆகவே, நியூஸிலாந்து அணி எமக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று பாக். கிரிக்கெட் சபை ஐ.சி.சியிடம் முறையிட்டது.

இந்த விவகாரத்தை விசாரித்த ஐ.சி.சி., "பாகிஸ்தானில் நிலவிய சூழல காரணமாகவே நியூஸிலாந்து வீரர்கள் தங்கள் பயணத்தை பாதியிலேயே ரத்துச்செய்து திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் பார்வையில் இது நியாயமானதுதான். ஆகவே, பாகிஸ்தானுக்கு நஷ்டஈடு தரவேண்டிய அவசியம் இல்லை என அறிவித்துவிட்டது. (ம)

# அஸ்ட்ரா கிண்ணக் கிரிக்கெட்; 300 பாடசாலைகள் பங்குபற்றும்

அஸ்ட்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 300 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளும் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆதரவுடன் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் இப்போட்டிகளை நடத்துகிறது.

14 வயதின் கீழ் மற்றும் 16 வயதின் கீழ் ஆகிய இரு பிரிவுகளில் இபபோட்டிகள் நடைபெறவுள்ளன.

யுனி லிவர் நிறுவனம் இப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்குகிறது. போட்டிகளை நடத்துவதற்காக 35 லட்சம் ரூபாவை இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்திற்கு யுனி லிவர் நிறுவனம் வழங்கியுள்ளது.

இப்போட்டிகளில் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 300 பாடசாலைகளைச் சேர்த்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கு பற்றும் பாடசாலை அணிகளைப் பதிவு செய்யும் வேலைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பமாகவுள்ளன. 16 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ளன. (ம)

# சச்சினை விமர்சிப்பவர்கள் மீது ராகுல் திராவிட் கடும் பாய்ச்சல்

மிகமுக்கியமான ஆட்டங்களில் சச்சின் டெண்டுல்கர் சரியாக ஆடுவதில்லை என்று விமர்சனம் செய்பவர்களை ராகுல் திராவிட் கடுமையாக சாடியுள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 673 ஓட்டங்களைக் குவித்து தொடர் நாயகன் விருதைப் பெற்று இந்தியாவுக்குப் பெருமை தேடிததந்தவர் டெண்டுல்கர்.

ஆனால், மிக முக்கியமான இறுதிப் போட்டியில் இவர் எடுத்தது வெறும் 4 ஓட்டங்கள். இந்திய தோல்விக்கு இவர் சரியாக விளையாடாததும் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. அப்போது "முக்கியமான போட்டிகளில் சச்சின் சரியாக விளையாடமாட்டார்; காலை வாரி விடுவார்" என்று கடும் விமர்சனம் எழுந்தது.

இந்த விமர்சனம் ராகுல் திராவிடிற்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவர் கூறியதாவது:-

"இது போன்ற விமர்சனங்கள் அர்த்தமற்றவை. இதை கேட்கும் போது வேதனையாக இருக்கிறது. இவ்வளவு நாள் அவர் செய்த சாதனைகளையும் அணிக்காக அவர் செய்த சேவைகளையும் பார்க்கவேண்டும். எந்தநிலையிலும் சிறப்பாக விளையாடக்கூடியவர் அவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் அவரால்தான அதிகஓட்டங்களைக் குவிக்கமுடிந்தது. இதை யாராவது குறைசொன்னால் அவரது மன நிலையை பரிசோதனை செய்யவேண்டும். இறுதிப் போட்டியில முதலில் களத்தடுப்பு செய்யும் கங்குலியின் முடிவு சரியானதுதான். ஏனெனில் ஆடு களத்தில் அப்போது ஈரத்தன்மை இருந்ததால், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று நினைத்தோம். முதலில 20 ஓவர்களில் நாம் அதிக ஓட்டங்களை விட்டுத்தந்துவிட்டோம். அவர்கள் அடிக்கத்தொடங்கியதும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"எங்கள் முடிவில் எந்தத் தவறும் இல்லை. திட்டப்படி நாங்கள் செயற்படாததுதான் எங்கள் தவறு.

"2007 உலகக் கிண்ணத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு நமது இளமையான அணி பெரிய சவாலாக இருக்கும்.

"நமது அணியின் திறமையைப் பார்த்தால் மீண்டும் உலகக் கிண்ணத்தைப் பெறுவதற்கு இன்னொரு 20 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதில்லை. அடுத்த உலகக் கிண்ணத்தை கைப்பற்றப்போகும் இந்திய அணியில் இப்போது உள்ளவர்களில் 80 சதவீதம் பேர் மீண்டும் நிச்சயம் இடம்பிடிப்பார்கள் அந்த அளவுக்கு திறமைசாலிகள் இருக்கின்றனர்" - என்றார் திராவிட். (ம)

## தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டி

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் நாளை ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு பிரதமவிருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகராயகம்போலும், சிறப்புவிருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வைகெஸ்வராசா மற்றும் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஆகியோரும் கலந்துகொள்வர்.(ம-5-74)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்29

புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறையில் முக்கிய பங்காற்றும் வடக்கு - கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதியுள்ளது.

இது தொடர்பாக கல்வி மேம்பாட்டுப்பேரவை அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஒரு தசாப்த காலமாக ஆசிரியர் பற்றாக்குறை உடைய வடக்கு - கிழக்கு மாகாணப் பள்ளிகளில் தொண்டர் ஆசிரியர்கள் மூலம் கற்றல், கற்பித்தல் நிறைவு செய்யப்படுகின்றது. வேதனம் எதுவுமின்றி தொண்டு அடிப்படையில் பல வருடகாலமாக சேவையாற்றி வரும் இவர்கள் நிரந்தர நியமனம் இன்று வரும், நாளை வருமென இலவு காத்த கிளி போல் ஏமாந்துவிட்டார்கள். எமது நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்க அரும்பாடுபட்டுவரும் நாங்கள், தொண்டர் ஆசிரியர் விடயத்தில் கருணை காட்டுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பள்ளிகளில் சுமார் 6200 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறையினால் உள்ள கல்விப் பாதிப்புக்களை ஈடுசெய்யும் முகமாகவே காலத்துக்குக் காலம் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்டு சேவையாற்றி வரும் இவர்கள வேதனம் எவற்றையும் பெற்றுக்கொள்ளாது, தொண்டு அடிப்படையிலேயே சேவையாற்றி வருகின்றார்கள். அவ்வப்போது தொழில் வாண்மை பயிற்சிகள் பெற்று கற்றல் கற்பித்தலுக்கான தயார் நிலையில் கற்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதால் இவர்கள் முக்கிய பங்காற்றிக்கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக ஆரம்பக் கல்விப் பிரிவில் இவர்கள் சேவை மகத்தானது.

தொண்டர் ஆசிரியர்களின் சேவை முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நேர்முகப்பரீசை நடத்தி தெரிவானோர் விவரம் அனுப்புமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அமைச்சரவை பணித்தது. அதன்படி 'ஏ' பட்டியல், 'பி' பட்டியல் என வகுக்கப்பட்டது. அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென கூறப்பட்டது. 3 வருடங்கள் ஆகியும் அது நிறைவேற்றப்படாது உள்ளது. 'ஏ' பட்டியலில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டும் 'பி' பட்டியலில் உள்ளவர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படாததால் அவர்கள் விரக்தியடைந்த நிலையில் காணப்படுகின்றார்கள்.

இந்நிலையில், நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத தொண்டர் ஆசிரியர்கள் அகிம்சைப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். இதனால் பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறாமையினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஓர் ஆசிரியர் உள்ள பள்ளிகள் பலவற்றை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே எமது வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி நலன் கருதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்ற ஒழுங்குகள் செய்து உதவுமாறு மிகப் பணிவாகவும் அன்பாகவும் வேண்டுகின்றோம்.

- இவ்வாறு அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-0)


## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. வடக்கு - கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள கேள்விச்சபைத் தலைவரினால் கோப்பாய் சுற்றியற் கூறில் காச நோயாளருக்கான தனிப்பட்ட வார்ட்டைப் பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை இத்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்.7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன், ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
27.03.2003 (C/27038)

எந்திரி.அ.வேல்மாணிக்கம்,
தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை.

# ஒரு வாரம்

தன்னுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று சொல்லிக் கொண்டு தன் சுயநலத்துக்காக ஈராக் மீது போர் தொடுத்துள்ளது அமெரிக்கா. சதாமைப் பதவியில் இருந்து அகற்றுகின்றேன் என்பதும், பேரழிவு ஆயுதங்களை ஒழித்து உலகின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றேன் என்பதும் ஈராக் போருக்கான அமெரிக்காவின் வெளிப்படையான காரணங்கள். இருந்தாலும், ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதும் மத்திய கிழக்கில் தன் கட்டுப்பாட்டை பலப்படுததி வஸ்தரிப்பதுமே அமெரிக்காவின் முக்கிய நோக்கம்.

இதற்காகவே ஐநாவின் அனுமதியின்றியே போரை ஆரம்பித்தது அமெரிக்கா. அதனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளன இன்னும் சில மேற்குலக நாடுகள். அதனைவிட முதலாளித்துவ நாடுகள் என்பது மிகப்பொருந்தும்.

போர் தொடங்கப்பட்டு ஒரு வாரம் கடந்துவிட்டது. அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் எதிர்பார்த்தது போன்று, போர் அவ்வளவு இலகுவில் முடிவடையப்போவதில்லை என்பது அவர்களுக்குத் தெளிவாகிவிட்டது. ஈராக்கிய வீரர்களிடம் இருந்து மூர்க்கமான எதிர்ப்புக் கிளம்புகின்றது. இயற்கையும் அவர்களுக்கு ஓரளவு ஒத்துழைக்கின்றது.

ஈராக்குடனான போர்த் திட்டமிடலின் போது அமெரிக்கர்கள் இருமுனைகளில் பக்தாத்தை நெருங்க முடிவு செய்திருந்தனர். தெற்கே குவைத்தில் குவித்து வைத்திருந்த படைகளை நகர்த்தி பக்தாத்தை நெருங்குவது அதில் ஒன்று.



அதேசமயம் துருக்கிய எல்லையூடாக ஈராக்கின் வடபகுதிக்குள் நுழைந்து பக்தாத்தை நெருங்குவது இரண்டாவது வழி. இது இலகுவான வழி என்றும் அந்தப் பகுதியில் இருக்கும் குர்டிஷ்களிடம் இருந்து தமக்கு ஆதரவு கிடைக்கும் என்றும் அமெரிக்கர்கள் கருதினர்.

அதுதவிர, வடக்குமுனை ஒன்றில் இருந்து தாக்குதல் நடத்தாமல் பக்தாத்தை நெருங்குவது சாத்தியமற்றதொன்று என்பதையும் அமெரிக்கர்கள் உணர்ந்திருந்தார்கள். அதனாலேயே தெற்கில் குவைத்திலும் வடக்கில் துருக்கியிலும் தமது படைகளை அவர்கள் குவித்து வைத்திருந்தனர்.

ஆனால், கடைசி நேரத்தில் துருக்கி, அமெரிக்காவின் காலை வாரிவிட்டது. தனது நிலப் பகுதியைப் பயன்படுத்தி அமெரிக்கா, ஈராக்கைத் தாக்குவதற்கு அது அனுமதி மறுத்துவிட்டது. இதனால், வடக்கு முனையில் இருந்து பகதாத்தை நெருங்கும் அமெரிக்கர்களின் திட்டத்துக்கு தடங்கல்கள் ஏற்பட்டன.

அதேசமயத்தில் தெற்கில், குவைத்தில் இருந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் மூன்று முனைகளில் முன்னேறின. ஒரு பகுதி ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை நோக்கி முன்னேறியது. அங்கு கடும் எதிர்ப்பைச் சந்தித்தது. ஒரு தடவை உள்ளே நுழைந்து அடிவாங்கிக் கொண்டு வெளியேறியது. இப்போது அந்த நகரத்தைச் சுற்றி வளைத்துள்ளது.

இரண்டாவது அணி குவைத்தின் நடுப்பகுதியூடாக தென்மேற்கில் நகர்ந்து நஸீரியா நகரைக் கைப்பறறியதுடன் துறைமுக நகரான உம் ஹஸரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. பின்னர் அங்கிருந்து வடக்காக பக்தாத் நோக்கி நகர்கிறது.

மூன்றாவது அணி, இரண்டாவது அணியில் இருந்து இன்னும் மேற்காக விலகி, பாலைவனங்களுடாக நேரே வடக்கு நோக்கி விரைந்தது. நெடும் பாலைவனங்களில் எதிர்ப்பின்றி முன்னேறிய அந்தப் படைப் பிரிவு பின்னர் மேற்கே திரும்பி பக்தாத்தை நோக்கிச் சென்றது. யூப்ரட்டீஸ் நதியைக் கடந்து பக்தாத்தில் இருந்து 70 கிலோமீற்றர் தொலைவை அது அடைந்தபோது ஈராக்கியப் படையினரால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டது.

இதற்கிடையில், இரு தினங்கள் கடும் மணற் புயலில் சிக்கிக் கொண்டு முன்னேறமுடியாமல் தவித்தன கூட்டுப் படைகள். இது படையினரின் மனோ நிலையைப் பெரிதும் பாதித்ததாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

போர் இரண்டாவது வாரத்துக்கு நகர்ந்துள்ளது. மேலும் சில காலம் அது நீடிக்கும் என்பதை இராணுவ அதிகாரிகள் இப்போது ஏற்றுக் கொண்டுள்ளனர். தாம் நினைத்த அளவு விரைவாகவோ, முன்னர் கூறியது போன்று திட்டமிட்டகாலத்துக்கு முன்னதாகவோ போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாது என்பதை களத்தில் உள்ள அதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றனர்.

அதிபர் சதாமை இலக்குவைத்து நடத்தப்பட்ட சரமாரியான குண்டுத் தாக்குதல்களில் இருந்தும் ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்தும் அவர் தப்பிவிட்டார் என்பது அமெரிககப படை அதிகாரிகளுக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுவே போர் முடிய நீண்டகாலம் எடுக்கும் என்பதற்கு போதுமான சான்று என்கிறார்கள் அவர்கள்.

தெற்கில் இருந்து முன்னேறிய கூட்டுப்படையினரில் ஒரு பகுதியினர் பக்தாத்தை நெருங்கி வந்து விட்டாலும், மேற்கொண்டு முன்னேறுவதில் அவர்கள் பெரும் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளனர். பக்தாத்தை நெருங்க நெருங்க மேலும் மேலும் மூர்க்கமான தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டிவரும் என்பதுடன், இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதத் தாக்குதல்களையும் எதிர்கொள்ளவேண்டிவரும் என்று கூட்டுப்படை நிச்சயமாக எதிர்பார்க்கின்றது.

எனவே, பக்தாத் மீதான முற்றுகையை மேலும் தீவிரமாக்க வடமுனையில் ஒரு போர்முனை திறக்கப்படுவது கூட்டுப் படைகளுக்கு மிக முக்கியமாயிற்று. துருக்கி அதற்கு இடமளிக்காத நிலையில், அமெரிக்கா, வடக்கு ஈராக்கில் தன் வான் படைகளை பரசூட் மூலம் தரையிறக்கியுள்ளது.

குர்டிஷ் இனத்தவர்களின் பலமான கோட்டைப் பகுதியிலேயே இந்தப் படையினர் தரையிறக்கப்பட்டுள்ளனர்.

சதாமின் ஆட்சியில் குர்டிஷ் இனத்தவர்கள் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர். இதனால், சதாமுக்கு எதிரான அலை அவர்களிடம் தீவிரமாக இருக்கின்றது.

பார்ட்ரியாட்டிக் குர்டிஷான் படை என்ற அமைப்பும் ஈராக்கிய இராணுவத்துக்கு எதிராகப் போராடி வருகின்றது. இவர்கள் தற்போது அமெரிக்கப் படையினருடன் இணைந்து பக்தாத் நோக்கி முன்னேறி வருகின்றனர். சதாமுக்கு எதிரான இவர்களின் எதிர்ப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள அமெரிக்கா முயல்கின்றது. அதனாலேயே குர்டிஷ்களின் கோட்டையான பகுதியில் அது தன் துருப்புக்களைத் தரையிறக்கியுள்ளது. அப்பகுதிக்கு மேலும் துருப்புக்கள் கொண்டுசென்று சேர்க்கப்படுகின்றன.

இங்கிருந்து இனி தெற்குநோக்கி- பக்தாத்துக்கான முற்றுகைக்காக - கூட்டுப் படைகள் நகரும். குர்டிஷ் இராணுவம் அதற்கு உதவும். ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான எதிரணிப் படைகளின் உதவியுடன் முன்னேறியது போன்ற ஒரு செயற்பாடே இது.

நீண்டதூரம் பாலைவனங்கள் ஊடே முன்னேறியுள்ள கூட்டுப் படையினரை ஈராக்கியப் படைகள் சில இடங்களில் ஊடறுத்துத் தாக்கத் தொடங்கியுள்ளன. அதுதவிர அவர்கள் நகர்ப்புற போரிலும் ஈடுபட்டுள்ளனா. கெரில்லா யுத்தம் சார்ந்த நகர்ப்புறப் போரில் கூட்டுப்படைகளும் சரி, அமெரிக்கப் படைகளும் சரி தேர்ந்தவை அல்ல. இதனால்தான், தெற்கே பஸ்ரா நகரினுள் செல்வதற்கு பிரிட்டிஷ் படைகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றன.

ஈராக் வசம் இருக்கும் படைகளில் சண்டைத் திறம்வாய்ந்த மிக முக்கியமான பிரிவு ஈராக்கிய குடியரசுப் படை. இராணுவத்தில் அதிகளவான சம்பளத்தைப் பெறுபவர்களும் இவர்கள்தான். விசேட பயிற்சி பெற்றவர்கள். ரி-72 ரக டாங்கிகள் இவர்கள் வசம் இருக்கின்றன. இரவு நேரத்தில் சண்டையிடும் ஆற்றலும் இந்தப் படைப் பிரிவிடம் உள்ளது.

பஸ்ரா நகரில் கூட்டுப் படைகளை கடந்த 8 நாள்களாகத் தடுத்து நிறுத்தி வைத்திருப்பவர்கள் இவர்களே.

பக்தாத்திலும் அதற்கு மேற்கேயுள்ள கர்பாலாவிலும் வடக்கே டிக்ரிற்றிலும் இவர்களே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஈராக்கிய இராணுவத்தில் 3 லட்சத்து 75ஆயிரம் பேர் உள்ளனர். ஐந்து பிரிவுகளாக அவர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர். 2ஆயிரம் டாங்கிகள் அவர்கள் வசம் இருக்கின்றன. எனினும் ஈராக் வசம் இருக்கும் ஆயுதங்களில் பெரும்பாலானவை மிகப் பழையவையாகும்.

ஈராக் வான் படையிடம் மிகச் சில நவீன விமானங்களே இருக்கின்றன. அவற்றைச் செலுத்துவதற்கான பயிற்சி பெற்ற ஒரு சில விமானிகளே இருக்கின்றனர். ஆனால், அமெரிக்கர்கள் வசம் மிக மிக நவீனமான போர்த் தளபாடங்கள் இருக்கின்றன. எனினும், அமெரிக்கா நினைத்த வேகத்தில் போரை நகர்தத முடியவில்லை என்பது அதற்கு பெரும் பின்னடைவே.

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் ஈராக்கியப் படையினரால் கைதுசெய்யப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களும் கொல்லப்பட்டவர்களின் சடலங்களும் ஈராக்கிய தொலைக் காட்சியில் காட்டப்பட்டுள்ளன. இது அமெரிக்கர்களின் மன நிலையைப் பெரிதும் பாதித்துள்ளது. ஒவ்வொரு

(12ஆம் பக்கம் பார்க்க)

# சதாம்

இன்று உலகின் மொத்த மக்களும் நோக்கும் ஒரே ஆள் சதாம் ஹுசைன். இவர் மீது அமெரிக்காவின் குற்றச்சாட்டு என்ன? பேரழிவு ஆயுதங்களை மறைத்து வைத்து இருக்கிறார்



10 வயதில் சதாம்

என்பதுதான். இப்படிக்கூறும் அமெரிக்காவிடம் ஆயுதங்களே இல்லையா? என்று யாரும் இப்போது எதிர்க்கேள்வி கேட்கும் நிலையில் இல்லை.

காரணம் விரும்பியோ, விரும்பாமலோ வளைகுடா போர் ஆரம்பித்துவிட்டது.

இந்த போருக்கான அமெரிக்காவின் நோக்கம், உண்மையிலேயே சதாம் வைத்துள்ள ஆயுதங்களை அழிப்பதா அல்லது ஈராக் முழுவதும் உள்ள பெட்ரோல் கிணறுகளை அபகரிப்பதா என்பதை கிளறிப் பார்த்துக்கொண்டு இருக்க இப்போது நேரம் இல்லை.

அமெரிக்க பிரிட்டிஷ் நேசப் படைகளை எதிர்கொள்ள முடியாமல் சதாமும் அவரது குடும்பத்தினரும் ஈராக்கை விட்டு ஓடிவிடுவார்களா? அல்லது அவர்கள் கொன்று குவிக்கப்படுவார்களா? அல்லது ஈராக்கின் பாலைவனத்திலும், ஈராக் ராணுவத்தின் எதிர்த்தாக்குதலும் சிக்கி அமெரிக்க படைகள் பின்வாங்கப் போகின்றனவா என்பதுதான் இப்போது உள்ள மிகப்பெரிய கேள்வி. இந்த கேள்வியை போர் முனையிலேயே விட்டு விடுவோம். இதற்கெல்லாம் நடு நாயகனான சதாமின் கடந்தகால வாழ்க்கையைப் பற்றி இப்போது தெரிந்துகொள்ளலாம்.

1937ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி, ஈராக்கில் திர்கிட் என்ற நகர் அருகே உள்ள அல்



1[illegible] வயதில் சதாம்

ஆஜா என்ற கிராமத்தில் சதாம் ஹுசைன், ஏழை விவசாயி ஒருவரின் மகனாகப் பிறந்தார். அவர், தனது தந்தையின் முகத்தைக்கூட பார்த்தது இல்லை. சதாம் பிறக்கும் முன்பே அவரது தந்தை இறந்துவிட்டார் என்று ஒரு தகவல். குடும்பத்தை விட்டு ஓடிவிட்டார் என்று மற்றொரு தகவல். அனாதையாக பிறந்த சதாம், தனது வளர்ப்புத் தந்தையால் பல கொடுமைகளுக்கு ஆளானார். வயலில் நீண்டநேரம் உழைக்க வேண்டும். பள்ளிக்கூடம் செல்லவும் அனுமதி இல்லை. எனவே 10வயது ஆனபோது கூட எழுதப் படிக்கத் தெரியாமல் இருந்த சதாம் ஹுசைனை அவரது தாய்மாமா கைரல்லா தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டு வளர்த்தார். அதன்பிறகுதான் சதாம் ஹுசைன் பாடசாலைக்கே அனுப்பப்பட்டார்.

சதாமின் மாமா கைரல்லா, ராணுவ அதிகாரி. ஈராக்கில் ராணுவத்துக்கு எதிராகப் புரட்சி நடந்தபோது கைரல்லர் கைது செய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார். ஜெயிலில் இருந்து விடுதலையான கைரல்லா, பாக்தாத் நகர மேயர் ஆனார். அப்போது கைரல்லாவுக்கு எதிராக தலை தூக்கிய கம்யூனிஸ்டு தலைவர் ஒருவரை சதாம் ஹுசைன் சுட்டுக் கொன்றார். இதுதான் சதாம் செய்த முதல் கொலை. அப்போது அவருக்கு வயது 20 தான். ஆனால் கொலை வழக்கில் இருந்து சதாம் தப்பிவிட்டார்.

1959ஆம் ஆண்டு பாத் கட்சியினரை அப்போது ஈராக் தலைவராக இருந்த அப்துல் கரீம் கசீம் என்பவர் கொன்று குவித்தார். எனவே அப்துல் கரீமை கொலை செய்ய பாத் கட்சி திட்டம் தீட்டியது. அந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு சதாமிடம் கொடுக்கப்பட்டது. ஆனால், இதில் அந்தத் திட்டம் தோல்வி அடைந்தது. இதைத் தொடர்ந்து சதாம் 1960 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1964ஆம் ஆண்டு அவர் ஜெயிலில் இருந்து தப்பி எகிப்து நாட்டில் தஞ்சம் புகுந்தார்.

1968ஆம் ஆண்டு பாத் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றியதும் சதாம் நாடு திரும்பினார். அவரது உறவினர் அகமது ஹசன் அதிபர் ஆனார். அவரது பின்னணியில் இருந்து ஆட்டுவிக்கும் சக்தியாக சதாம் உருவெடுத்தார். 1973ஆம் ஆண்டு சதாம், ஈராக் நாட்டின் துணை அதிபராக பதவி ஏற்றார். அதன்பிறகு சதாம் எப்படி அதிபர் ஆனார் என்பது மிகவும் பரபரப்பான சம்பவங்கள் ஆகும். 1979 ஜூலை 11ஆம் திகதி புரட்சி படை குழுவின் ரகசிய கூட்டம் நடந்தது. சதாம் புதிய அதிபராக பொறுப்பு



17 வயதில் சதாம்

ஏற்க வேண்டும் என்று இதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜூலை 15ஆம் திகதி 65வயதான அதிபர் அகமது ஹசன், தொலைக்காட்சியில் தோன்றி, உடல் நலக்குறைவு காரணமாக பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். ஜூலை 22ஆம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு கலாசாரத்தை சீரழிக்க சதி முயற்சியா?

கடந்த சில வாரங்களாக பல திடுக்கிடும் செய்திகள் யாழ்.குடா நாட்டில் வெளியாகி வருகின்றன. அரசுக்கும் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாகி நாடு முழுவதும் அமைதி நிலவுகின்ற இவ்வேளை, தமிழர் பண்பாட்டு கௌரவத்தை சிதைக்கும் வகையில் அரங்கேறிவரும் வன்முறைச் செயல்கள் தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக கின்றன.

இந்த வன்முறைகளின் அடிப்படை சூத்திரதாரிகள் யாரென இனங்காண முடியாவிட்டாலும், வன்முறைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளவர்கள் தமிழர்கள்தான் என்பதும், அவர்கள் சிதைக்கத் தொடங்கியிருபபது எமது தமிழ்ச் சமூகத்தைத்தான் என்பதும் வெளிப்படையாகி விட்டது.

தமிழ்ச் சமூகத்தினை செல்லரிக்கத் தொடங்கியிருக்கும் இந்த கலாசார வன்முறைகள் எம் பண்பாட்டின் அத்திவாரக் கற்களாகிய பெண்கள் மீதே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

சில மாதங்களுக்கு முன்பிருந்து குடாநாட்டுப் பகுதியில் தனிமையில் வாழும் பெண்கள் மர்மமான முறையில் படுகொலை செய் யப்பட்டனர். யாழ்ப்பாண நகரப் பிரதேசத்தை அண்டி ஒரு கல்வித் திணைக்கள பெண் உத்தியோகத்தரும் இரண்டு மூதாட்டிகளும் படுகொலை செய்யப்பட்டனர். வடமராட்சியில் வயோதிப மாதும் தென்மராட்சியில் இளம் பெண ஒருவரும் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தனர்.

இந்த மர்மத்தின் தீவிரவாதம் குடாநாட்டுத் தெருக்களில் இப்போது பகிரங்கமாக அரங்கேறத் தொடங்கி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

சமீபத்தில் சாவகச்சேரிப் பகுதியில் பாடசாலைச் சீருடை பெறுவதற்காக தனது உறவுப் பெண்ணுடன் சென்றுகொண்டிருந்த பதினைந்து வயது பாடசாலை மாணவி ஓட்டோவில் கடத்தப்பட்டு வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். திரைப் படங்களில் காட்டப்படுவதுபோல் அவரது சகோதரரின் வீட்டின் முன் கொண்டு வந்து மயங்கிய நிலையில் போடப் பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படுவோர் மனித நாகரிகம் தெரியாது வாழ்ந்தவர்கள் அல்லர். சமூகத்தின் மத்தியில், நாகரிகம் மிக்க மனிதர்களோடு, உறவாடிய தமிழ் இளைஞர்கள் என்பதும், ஈழத் தமிழரின் தியாகமும் இரத்தமும் கலந்த வரலாற்றின் வழிவந்த பெற்றோர்களின் பிள்ளைகள்தான் என்பதும் வெளிப்படையானது.

இந்த வன்சிந்தனை, மிருகத்தனமான இந்த நடத்தைக்கான ஊக்கம் அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதே இன்றைய வினாவாகும்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் சமீப காலங்களில் பாடசாலைகளை விட்டு வெளியேறியவர்கள், படித்தவர்கள், நாகரிகம் அறிந்தவர்கள் என்று தெரிகிறது. எப்படி இவர்கள் மிருகங்களாக மாறினார்கள்? தனது வாழ்வைத் தீர்மானிப்பதற்கு ஒரு பெண்ணுக்கு உரிமையில்லையா?

ஒருபுறம் விடுதலைப் போரில் பெண்கள் வீறுநடை போட, மறுபுறம் பெண்களை அடிமைகளாக்கும் நாடகங்கள் குடாநாட்டில் அரங்கேறத் தொடங்கிவிட்டனவா?

தீவகப் பகுதியில் தனது மனைவியை ஒருவன் கோடரியால் தலையில் அடித்துக் கொன்றிருக்கின்றான். இதேபகுதியில் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்பட்ட இரு இளம் பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதில் ஒருபெண தற்கொலைசெய்து கொண்டார்ள். இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் ஆசிரியர் என்பது வேதனைக்குரிய விடயம்.

சாவகச்சேரிப் பகுதியில் தனிமையில் நடந்துவந்த ஒரு பெண்ணை பற்றைக்குள் இழுத்துச் சென்று வல்லுறவு கொள்ள முயன்றிருக்கிறான் ஒருவன். கொக்குவில் பகுதியில் வீட்டுக்குள் தனிமையில் இருந்த இளம் பெண்ணுடன் சேட்டை புரிந்திருக்கிறது இளைஞர் கோஷ்டி ஒன்று.

**வன்முறைகளில் ஈடுபடத் தொடங்கியிருப்பவர்கள் தமிழர்கள்தான் என்பதும் அவர்கள் சிதைக்கத் தொடங்கியிருப்பது எமது தமிழ்ச் சமூகத்தைத்தான்என்பதும் வெளிப்படையாகிவிட்டது.**

திடீரென அதிகரித்துள்ள இந்த கலாசார வன்முறைகளின் பின்னணி தமிழர்களின் கலாசாரத் தலைநகர் என வர்ணிக்கப்படும் யாழ்குடாநாட்டை பண்பாட்டுச் சீரழிவுக்குள் தள்ளும் திட்டமிட்ட சதி வேலையா என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. எமது இளம் சந்ததி குரூர சிந்தனைகளுடன வளரத் தொடங்கிவிட்டதா என்பது மற்றொரு கேள்வி. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மட்டும் இங்கு நடைபெறவில்லை.

சமீபத்தில் யாழ்.ஐந்து சந்திப் பகுதியில் ஏற்பட்ட மோதல்கள் எம் சமூகத்தின் காய்ந்த புண்ணைக் கிளறும் முயற்சி படிப்படியாக அரங்கேறத் தொடங்கிவிட்டதோ என்று சந்தேகிக்க வைக்கிறது.

**ஆர்.மார்க் அன்ரனி**

சாதி, சமய, பிரதேச வேறுபாடின்றி அனைத்துத் தமிழ் மக்களுக்காகவும 18ஆயிரம் வரையான இளைஞர்கள், யுவதிகள் தமது வாழும் வயதில் இந்த மண்ணில் மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள். அவர்களின்

**செய்திக் கட்டுரை**

முயற்சியில் எம்மைச் சூழ்ந்த முட்கம்பிகளை உடைத்தெறிந்து விட்டதாக நாம் மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில், "பழைய குருடி கதவைத் திறவடி" என யாழ்ப்பாணச் சமூகம் மாறத்தொடங்கியிருப்பது" வேதனைககுரியது.

இந்த அமைதியான சூழலில் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடத தொடங்கியுள்ள பொலீஸார் எம் நாட்டின் இளம் தலைமுறையைக் காப்பாற்ற விரைந்து நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும்.

தொடர்ந்து மௌனத்தைக் கடைபிடிக்காது எம் காவலர்களும் தமிழ் தேசத்தில் ஊடுருவத் தொடங்கியுள்ள புல்லுருவிகளைக் களைய நேரடியாகக் களத்தில் இறங்கவேண்டும். அதற்குரிய அரசியல் வழிவகைகளை ஏற் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே இன்றைய குடாநாட்டு சமூகத்தின் வேண்டுகோளாக உள்ளது. ★

## சதாம்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி சதாம் திடீர் என்று புரட்சி படைதலைவர்களையும் கட்சித் தலைவர்களையும் அழைத்தார்.

100க்கும் மேற்பட்டவர்கள் அந்த கூட்டத்தில் கூடி இருந்தனர். சுருட்டை புகைத்தபடி சதாம் ஹுசைன் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது, சதாமின் உதவியாளர் எழுந்து, சதாமுக்கு எதிராக நடந்த ஒரு புரட்சி முறியடிக்கப்பட்டு விட்டது. இதற்கு நமது புரட்சி படை குழுவின் செயலாளர் மஷாதி காரணம். அவர் இப்போது உங்கள் முன் தோன்றி, இந்த புரட்சியில் பங்குகொண்டவர்களின் பெயரை ஒப்புதல் வாக்கு மூலமாக கொடுப்பார் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து சதாமுக்குப் பின்னால் இருந்த திரை விலகியது. சித்திரவதை செய்யப்பட்டு காயங்களுடன் இருந்த மஷாதி அங்கு தோன்றினார். அவர், சதாமுக்கு எதிராக சதி செய்தது யார் யார் என்றபட்டியலை வாசித்தார். மொத்தம் 60 பேரின் பெயர்களை கூறினார். அந்த 60 பேரும் அப்போது அந்த கூட்டத்தில்தான் அமர்ந்து இருந்தனர். அவர்கள் அப்படியே அதிர்ச்சியில் உறைந்துபோய் விட்டனர். ஒவ்வொரு பெயராக வாசிக்கவும் அவர்கள் அங்கு இருந்து ஒவ்வொருவராக அப்புறப்படுத்தப்பட்டனர். அப்போது ஒருவர், ஐயா, நான் அப்பாவி என்றுசத்தம் போட்டார்.

சிறிது நேரத்திலேயே அந்த 60 பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் சதாம் வீடியோவில் பதிவு செய்ய உத்தரவிட்டார். ரத்தத்தை உறைய வைக்கும் இந்த வீடியோக் காட்சிகள் ஈராக் முழுவதும் ஒளிபரப்பப்பட்டன. அதன்பிறகு மூச்! சதாமுக்கு எதிராக யாரும் வாயை திறக்கவே இல்லை. அதன்பிறகு சதாம், முறைப்படி ஈராக் அதிபர் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் இன்றுவரை யாரும் ஆட்டமுடியாத, அசைக்க முடியாத தலைவராக சதாம் இருந்து வருகிறார். இனி, வெல்வது சதாமா 3 லட்சம் துருப்புக்களா என்பதற்கு காலம் விரைவில் விடை அளிக்கும்.

## ஒரு வார...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கரின் வீடுகளுக்கும் தொலைக் காட்சிகள் ஊடாக போரின் காட்சிகள நேரடியாகச் சென்று சேர்கின்றன.

இதுவரை 22 அமெரிக்கப் படையினரும் 20 பிரிட்டிஷ் படையினரும் உயிரிழந்துள்ளதாக கடாரில் உள்ள அமெரிக்கப் படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது. ஆனால், தாம் 700 அமெரிக்க, பிரிட்டிஷ் படையினரைக் கொன்றதாக ஈராக் கூறியுள்ளது.

ஈராக்கியப் படையினரின் உயிரிழப்பு விவரம் சரியாகத் தெரியவரவில்லை என்றும் அது கூறுகின்றது. எனினும், ஆயிரம் பேர்வரையில் ஈராக்கிய இராணுவத்தில் இறந்திருக்கலாம் என்றும் அது கூறுகின்றது. அதேசமயம் 800பேர் வரையில் சரணடைந்துள்ளனர்.

அதேநேரம், அமெரிக்கர்களின் குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் ஏவுகணைத் தாக்குதல்களாலும் நூற்றுக்கணக்கான ஈராக்கிய பொது மககள் உயிரிழந்துள்ளனர். அரபு நாடுகளும் ஏனைய முஸ்லிம் நாடுகளும, அமெரிக்காவுக்கு எதிரான மனிதாபிமானப் பிரச்சினையாக இதனைக் கிளப்பி வருகின்றன. உலக நாடுகள் பலவற்றிலும் ஈராக் போருக்கு எதிரான கடும் எதிர்ப்பலைகள் வெளிக் காட்டப்படுகின்றன. அமெரிக்காவுக்கு இவை பல அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றன. அமெரிக்காவிலேயே இந்தப் போருக்கு கடுமையான எதிர்பு இருக்கின்றது.

எனவே 1991இல் நடந்த வளைகுடா யுத்தம் போன்றல்லாமல் இந்தப் போர் மிக நீண்ட காலம் பிடிக்கும் என்பதை அரசியல் தலைவர்களும் இராணுவ ஜெனரல்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். வாரக்கணக்காகவோ, மாதக்கணக்காகவோ அது தொடரக்கூடும்.

- பிரேம்.




உ

சண்டிலிப்பாய் சீரணிப்பதியுறை

**ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானம்**

சுபானுவருஷ

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

கிரியாகால விவரம்:

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 06-04-2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி |
| கப்பல் திருவிழா: | 10-04-2003 வியாழக்கிழமை மாலை |
| சப்பரத் திருவிழா: | 15-04-2003 செவ்வாய்க்கிழமை மாலை |
| இரதோற்சவம்: | 16-04-2003 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி |
| தீர்த்தோற்சவம்: | 17-04-2003 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி |

19-04-2003 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 6.00 மணிக்கு வசந்தோற்சவமும் நடைபெறும்.

*அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.*

ஆலய தர்மகர்த்தா சபையினர்.

*குறிப்பு:* 31-03-2003 திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு தற்காலிக கடைகள் ஏலத்தில் விடப்படும். (16083)



# கண்ணீர் அஞ்சலி

**வன்னித்தம்பி வல்லிபுரம்**

(தையிட்டி)

அவர்களின் மறைவினால் துயரத்தில் மூழ்கியிருக்கும் எமது சங்க முன்னாள் பொருளாளரும் அங்கத்தவருமாகிய **திரு.வ.பஞ்சலிங்கம்** அவர்களுக்கும் அவரது குடும்ப அங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்*

(16088)



உ

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில்

திரு. சி.பொன்னையா (அத்துவக்காத்து)

*அவர்கள் எழுதிய*

**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"**

**நூல் வெளியீட்டு விழா**

இடம் : யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடம்
காலம் : நாளை (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 3.00 மணி (புதிய நேரம்)

தலைவர்
யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
பேராசிரியர் **பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள்

வெளியீட்டுரை
கலாநிதி **எஸ்.சிவலிங்கராஜா** அவர்கள்

நயப்புரை
பேராசிரியர் **அ.சண்முகதாஸ்** அவர்கள்

மதிப்புரை
கலாநிதி **மா.வேதநாதன்** அவர்கள்

முதற்பிரதி பெறுநர்
**எஸ்.கனகரத்தினம்** சட்டத்தரணி, J.P.U.M. அவர்கள்

சிறப்புப் பிரதிகள் வழங்கல்

பதிலுரை: **நூலாசிரியர்** அவர்கள்

புத்தகம் ரூபா 300

ஆதரவாளர்கள், ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழ் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம

(16085)



# பாசாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



19.03.2003 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத்தாய்

ஸ்ரீமதி

**செல்லம்மா சபாரத்தினக்குருக்கள்**

அவர்களின் பாசாண உத்வாசன கிரியைகளும், சபிண்டீகரணகிரியைகளும் இன்று (29.03.2003) சனிக்கிழமை காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பம் சூழ வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மோரியங்குள வைரவர் கோவிலடி,*
*முக்கராவத்தை,*
*வல்வெட்டித்துறை.*

(16084)

இராசசேகரக்குருக்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# மரண அறிவித்தல்

**வன்னித்தம்பி வல்லிபுரம் (சோதிடர்)**

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் அவர்கள் நேற்று (28.03.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பெரியபிள்ளையின் அன்புக் கணவரும் கண்மணி, வன்னியசிங்கம், ஈஸ்வரி, பாலசிங்கம், தருமராசா, பஞ்சலிங்கம், இராசமலர், பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தப்பிள்ளை, பொன்னம்மா, தம்பிஐயா, பத்மாவதி, சத்தியானந்தமலர், சந்திரவதனா, பத்மநாதன், இரத்தினமாலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.03.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*மில் ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

(16089)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# கடலுணவுகளை தெற்கே அனுப்ப சமாசம் விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்29

குடாநாட்டில் தேவைக்கு மேலதி கமாகக் கிடைக்கின்ற கடலுணவு வகைகளை தென்பகுதிக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கங்களின் சமாசம் மிக விரை வில் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி குடாநாட்டில் தினமும் கிடைக்கின்ற கடலுணவுகளை அந் தந்தப் பகுதி மீனவர் சங்கங்கள் ஊடாக நியாயவிலையில் கொள்வ னவு செய்து அவற்றை தரைவழிப் பாதையூடாக தெற்குச் சந்தைகளுக்கு அனுப்பிவைக்கவுள்ளதாக சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித் துள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் இவ்வாறு கடலுணவுவகைகள் தென் பகுதிச் சந்தைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் போர்ச் சூழ் நிலை காரணமாக அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து மீண்டும் தென்பகுதிக்கு கடலுணவு வகைகளை அனுப்பி வைப்பதன் மூலம் குறிப்பிட்ட அளவு வருமானத்தை வடபகுதி கடற்றொ ழிலாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும என சமாசத் தலைவர் தெரிவித்தார்.

குடாநாட்டின் கடற்பகுதிகளில் பிடிக்கப்படும் இறால்களுக்கு தென் பகுதியில் பெரும் கிராக்கி உள்ளதா கவும் -

எனவே, இவற்றை தென்பகுதிச் சந்தைகளுக்கு அனுப்புவதன் மூலம நல்ல வருமானத்தை கடற்றொழிலா ளர்கள் ஈட்டமுடியும் எனவும் -

அவர் மேலும் கூறினார். (ஒ-5-10)

## ஈராக்கில் இன்று நடப்பது முஸ்லிம்களுக்கு எதிரான போர்!

### அன்வர் இஸ்மாயில் எம்.பீ. அறிக்கை

"உலகின் ஏகாதிபத்திய வல்லர சான அமெரிக்கா அச்சப்படும் ஒரே யொரு காரணி இஸ்லாம் மட்டுமே. 1400 வருடங்களுக்கு முன்னரே இது எழுதப்பட்டுவிட்டது. ஈராக்கிய போர் முழு முஸ்லிம்களுடனான போராகும். இதில் அமெரிக்கா தோல்வியை தழுவப்போவது உறுதி."

- இவ்வாறு அமெரிக்கா மீதான தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில சம்மாந்துறையில் விடுத்த அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது:-

"ஐநா. பாதுகாப்புச் சபையின் உத் தரவை மீறி அமெரிக்கா நடத்தும் இப்போரை உலகமே கண்டிக்கிறது. அமெரிக்கா உலகை ஏமாற்ற நினைக் கிறது. இது உலக இஸ்லாமிய மக் களின் உணர்வுகளை அடக்க முற் படும் செயற்பாடாகும்.

ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின் லேடனை பிடிக்க கோடி கோடியாய் இறைத்தார்கள். என்ன நடந்தது? ஒரு தனி மனிதனைக் கண்டுபிடிக்க முடி யாத அமெரிக்கா முழு இஸ்லாமியர் களையும் அடக்க முயற்சிப்பது வேடிக் கையானது.

வளைகுடாவின் எண்ணெய் வளங் களைப் பெற்று இஸ்லாமியர்களின் இரத்தத்தை உறிஞ்ச அமெரிக்கா முயல்கிறது. இறை சக்தியின் உதவி யுடன் இப்போது முஸ்லிம்கள் வெல்வது உறுதி."

- இவ்வாறு அறிக்கை கூறுகிறது.(ஐ)

## சு.க. - ஜே.வி.பி. நேற்றுப் பேச்சு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நேற்று மீண்டும் பேச்சுக்கள் நடைபெற்றிருக் கின்றன.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெற்ற இந்தப் பேச்சுக்களின் போது இரு கட்சிகளும் இணைந்து கூட்டணி அமைப்பது குறித்தும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## பாதுகாப்பு நடவடிக்கை திருமலையில் தீவிரம்

திருமலை,மார்ச்29

திருகோணமலை மாவட்டத்தில் கரையோரக் கிராமங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக் கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சாம்பல்தீவுச் சந்தியில் நிலை கொண்டுள்ள படையினர் அந்தப் பகுதி ஊடாகச் செல்லும் வாகனங் களை மறித்துச் சோதனையிடுவதுடன தீவிர விசாரணைகளையும் மேற் கொண்டுள்ளார்கள். (ஒ-4)

## 'கொண்டாக்ட் லென்ஸ்' விநியோகம்

நல்லூர் லயன்ஸ் கழகம் தனது வழமையான சமூக சேவையின் மார்ச் மாத சேவையாக வசதியற்ற வர்களுக்கு விழியில் பொருத்தும் கண்ணாடி வில்லைகளை இலவச மாக வழங்கவிருக்கின்றது என்று அதன் தலைவர் வி.எஸ்.சொக்கலிங் கம் தெரிவித்தார்.

சத்திரசிகிச்சை நிபுணரின் சிபாரி சுக் கடிதத்துடன் கழக அலுவலகத் தில் நேரடியாகவோ அல்லது கடிதம மூலமோ வில்லைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

+21.0, +20.0, 22.00, 21.00 ஆகிய வில்லைச் சக்தி அளவுகளில் கண் வில்லைகளைப் பெற்றுக்கொள்ளலாம என்றும் - அவர் தெரிவித்தார். (ஒ-3)


50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திருமதி கி.இராஜராஜேஸ்வரி

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த

திருமதி இராஜராஜேஸ்வரி கருணேந்திரன்

அவர்களின் 50 ஆவது பிறந்தநாளாகிய இன்று (29.03.2003) அவரை பிள்ளைகள், சகோதரி குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றனர்.

(16095)



பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Automobile Forman | வாகனப்பிரிவு முகாமி |
| Automobile Mechanic | வாகனத் திருத்துநர் |
| Long Vehicle Driver | சாரதி (Long Vehicle) |
| Store Keeper | களஞ்சியப் பொறுப்பாளர் |
| Heavy Duty Pump Operator | உயர்வலு பம்பு இயக்குநர் |

மேற்காணும் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் சுயவிபரங்களுடன் நேரில் சமூகந்தரவும்.

866, Point Pedro Road,
Nallur, Jaffna.
Tel: 021 - 222 2849

The Project Engineer
Euroville

(16097)



விற்பனைக்கு

எம்மிடம் புதிய பட, பழைய பட கொப்பிகளும், CDகளும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- கமல்
பொற்பதி வீதி, கொக்குவில்.
T.P. : 0777 148889

(16108)



இடமாற்றம் - அறிவித்தல்

முன்னர் பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாயில் இயங்கிய

துர்க்கா மெடி கிளினிக

தொலைத்தொடர்பகம், ரிஷி காளான் விற்பனை நிலையம் பின்வரும் முகவரி யில் இயங்குகின்றது.

Dr.ஈஸ்வரி கந்தையா
மதவடி,
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.
T.P. : 222 2554

(15493)



தரம் 3 முதல் O/L வரை

முதலாம் தவணைக்கான பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

(16103)



ராஜா யாழ்ப்பாணம்

விஜய், ரீமாசென், வடிவேல்

பகவதி

10.30, 2.30, 6.30, இரவு 9.30



நிறைஞ்சனாஸ்

சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

மாயி

காட்சிகள் : 10.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணி

HOLLOW MAN



நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், சௌந்தர்யா, விஜய்ச்சக்ரவர்த்தி, கபாலி நடித்த

சொக்கத்தங்கம்

தினசரி காட்சிகள் : 2.30, 5.00, 7.00 (பி.நேரம)

31ஆம் திகதி முதல் வசீகரா


## கண்ணீர் அஞ்சலி

தாவரவியற்றுறையில் கடமையாற்றும் திரு.மா.அரசரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மா.இலட்சுமி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
தாவரவியற்றுறை, யாழ்/பல்கலைக்கழகம்.

(16107)

## துயர் பகிர்கின்றோம்

**சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை (மூப்பர்)**

பரி.கார்மேல் மாதா சபையின் முன்னாள் மூப்பரும், தலைவரும் ஆகிய

**சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை**

அவர்கள் கடந்த 22.03.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குருநகர்,
யாழ்ப்பாணம்.

(16106)

பரி.கார்மேல் மாதா
நிர்வாக சபையினரும்,
பக்திச் சபையினரும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வீரசிங்கம் சாவித்திரிதேவி

இருபாலை கிழக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் சாவித்திரிதேவி 28.03.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சிற்சபேசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் கௌரி நளாயினி, ராகினி (N.D.B.S. முதலாம் வருடம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்), ரோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜி, சித்திராங்கதன், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாலினி யின அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(16109)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி சரோஜினிதேவி தருமராசா

பொதிரானை, அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த திருமதி சரோஜினிதேவி தருமராசா அவர்கள் காலமானார்.

அன்னார் தருமராசா அவர்களது அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகளும் மீனாவின் அன்புத் தாயாரும் சிவகுமாரின் மாமியாரும் கோபிராம், அபிராம் ஆகியோ ரின் பேர்த்தியாரும் கமலாதேவி, சுசீலாதேவி, மங்களாதேவி, இரஞ்சினி தேவி, தவேந்திரநாதன், தெய்வேந்திரநாதன், ரவீந்திரநாதன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

நேற்று (28.03.2003) மாலை 4.00 மணியளவில் அன்னரது இல்லத்தில் இறுக்கிரியைகள் நடைபெற்று கருகம்பன் மயானத்தில் தகனக்கிரியை கள் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொதிரானை,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(C-27941)

தகவல்:
சி.தெய்வேந்திரநாதன்
(சகோதரன்)
(நெல்லியடி மத்திய சந்தை)

## கந்தையா வினாயகமூர்த்தி

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வினாயகமூர்த்தி 27.03.2003 அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் கணவரும் சிவயோகநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை), சிவநந்தினி, சிவறஞ்சன் ஆகியோரின் தந்தையும் நகுலேஸ்வரியின் மைத்துனரும் நகுலாம்பிகையின் மாமனாரும் பிரதீபன், பார்த்திபன், சயந்தீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2003 அன்று அவரது இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவ ரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

(16100)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## முத்துக்குமார் இராஜேஸ்வரன்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இந்திபாலை வதிவிடமாகவும் கொண்ட மு.இராஜேஸ்வரன் 27.03.2003 அன்று புட்டப்பத்தியில் இறைபதமெய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இராசாசிப்பிள்ளை முத்துக்குமார் தம்பதிகளின் மகனும் கொட்டடியைச் சேர்ந்த துரைராசா - தங்கரத்தினம் தம்பதிகளின் (லண்டன்) மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் அபிராமியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சரோஜினி (சில்லாலை றோ.க.த.க.பாடசாலை), யோகேஸ்வரி (கிராஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும் தேவநாயகம் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கரவெட்டி), ஆனந்தன் (கோறளிமடு அ.த.க. பாடசாலை, மட்டக்களப்பு), நித்தியலக்ஷ்மி நல்லைநாதன் (யா/சென். மேரிஸ் வித்தியாலயம் ஓ.L.R.), பாலஸ்கந்தா (லண்டன்), ஜயந்தன் (லண்டன்), யசோதை சுதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புட்டப்பத்தியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ச.தேவநாயகம்,
பிரதான வீதி,
வட்டியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(16104)

தகவல்:
இ.நல்லைநாதன்
4/15,நாவலர் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

## கந்தையா சின்னப்பா

(இளைப்பாறிய ஆசிரியர்)

இருபாலையைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையினை வசிப்பிடமாகவும தற்போது கனடாவில் வசித்துவந்தவருமான கந்தையா சின்னப்பா அவர்கள் 28.03.2003 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் இரஞ்சிதமலர் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் கனடாவில் வசிப்பவர்களான ஜெயதரன், ரஞ்சினி, தயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனடாவில் வசிப்பவர்களான பாலேந்திரா (பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், திருகோணமலை), சுபாங்கி ஆகியோரின் மாமனாரும் ஆறுமுகம் இரத்தினம் (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (31.03.2003) திங்கட் கிழமை கனடாவில் நடைபெறும் என்பதனையும், நாளை (30.03.2003), ஞாயிற்றுக்கிழமை அன்னாரது கந்தரோடை இல்லத்தில் துக்கம் அனுஷ் டிக்கப்படும் என்பதனையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ரஞ்சித வாசம்"*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

(16098)

தகவல்:
திரு. ஆ.இரத்தினம்
(சகோதரன்)

# ஒறுகொடவத்தவில் நேற்றும் பதற்றம்; பாதுகாப்புக்கு இராணுவம் அழைப்பு!

கொழும்பு,மார்ச்29

ஒறுகொடவத்த தொடர்மாடி வீடொன்றில் 13 வயதுச் சிறுமி ஒருவர் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டிருந்த சம்பவத்தில் பொலீஸ் அதிகாரிகள் தமது கடமையைச் சரியாக நிறைவேற்றாததாலேயே ஆர்ப்பாட்டம்,



மீட்கப்பட்ட சிறுமி

மோதல் நடைபெற்றது என பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா ஒப்புக் கொண்டார்.

ஒறுகொடவத்த பகுதியில் நேற்றும் பதற்றம் நிலவியது. அப்பிரதேச மக்கள் சிறுமி தடுத்துவைக்கப்பட்டிருந்த வீட்டின் பல பகுதிகளை தோண்டி அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவிகளின் சீருடைகள் உட்பட பெருமளவு உடைகளை மீட்டனர். இதனால் இந்த வீட்டில் ஏதோ ஒரு குற்றச் செயல் நடைபெற்றுள்ளது என அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

ஆத்திரமடைந்த பொதுமக்கள் மேற்படி வீட்டின் பல பகுதிகளை நேற்றிரவு தீமூட்டிக் கொளுத்தியுள்ளனர். பொலீஸார் பொதுமக்களுக்குச் சிறப்பான சேவை செய்து மக்களுடன உறவுகளை பேண வேண்டிய இந்த நேரத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றது துக்ககரமானது. பொலீஸ் அதிகாரிகள் இதனால் விசனம் அடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலீஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தப்பட்டவர்களிடம் தீவிர விசாரணை நடத்திவருகின்றது என்று பொலஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

மீட்கப்பட்ட பாடசாலைச் சீருடைகள், உடைகள் தொடர்பாக பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் இங்கு ஆபாசப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கலாம் என்றும், பாலியல் தொழிலில் சிறுமிகள் ஈடுபட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

ஒறுகொடவத்தப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதால் அமைதியைப் பேணுவதற்காக இராணுவத்தினர் அப்பகுதிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது. ஒறுகொடவத்தவில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு பாதுகாப்புப் படையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாநகரசபை பிரதி மேயர் அசத்சாலிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## தலைநகர் பக்தாத்துக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம். ஐந்து முதல் 10 நாள்களில் அவர்கள் பக்தாத்திலுள்ள எமது எல்லா நிலைகளையும் சுற்றி வளைக்க முடியும் என்பது ஆச்சரியமானதல்ல. இறுதியில் அவர்கள் நகருக்குள் வந்தாக வேண்டும். அப்பொழுது அவர்கள் பலத்த உயிரிழப்பைச் சந்திப்பர். இறுதிவரை நாம் போரிடுவோம். தமது தலை நகரைப் பாதுகாக்க ஈராக்கியர் எவ்வாறு போரிட்டார்கள் என்பதை சரித்திரம் கூறும்."

- இவ்வாறு ஈராக் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தை நெருங்கமுடியாமல் ஈராக்கின் தென் பகுதியிலும் வடக்கு பகுதியிலும் இன்னமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கா மேலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தரைப்படைகளை ஈராக்கில் குவிக்கவிருக்கிறது. ஈராக் படைகள் காட்டிவரும் மிகத் துணிச்சலான எதிர்ப்பினால் அந்தந்த இடங்களிலேயே நின்று சண்டையிடும் அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளின் கரங்களைப் பலப்படுத்தவே அமெரிக்கா இந்த மேலதிக படைகளை அனுப்புகிறது.

நேற்று ஒன்பதாவது நாளாக ஈராக் போர் தொடர்ந்தது. முஸ்லிம்களுக்குப புனித நாளான நேற்று வெள்ளிக்கிழமையும் பக்தாத் நகரம் அமெரிக்க குண்டுகளால் துளைக்கப்பட்டது.

இப்போரில் நேற்று முதல்தடவையாக 'பங்கர்களைத் தகர்க்கும்' 4,500 இறாத்தல் நிறையான குண்டுகளை அமெரிக்காவின் பி-52 குண்டு வீச்சு விமானங்கள் பக்தாத் மீது போட்டதாக சி.என்.என். தொலைக்காட்சி தெரிவித்தது. ஈராக் போர் எவ்வளவு காலம் நீடித்தாலும் பரவாயில்லை. அப்போரில் அமெரிக்கா வெல்லும் என்று ஜனாதிபதி புஷ் கூறியிருக்கிறார். பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயரைச் சந்தித்து பேசியதையடுத்தே அவர் இதனைக் கூறினார்.

ஈராக் தலைநகர் பக்தாத் மீது குண்டு வீசிவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப் படைகளின் காலைக் கடமைகளில் ஒன்றாகியுள்ளது. நேற்று முன்தினமிரவு பக்தாத் மீது அமெரிக்கா நடத்திய குண்டு வீச்சுக்களில் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் பழைய அரண்மனை, செய்தித்துறை அமைச்சு கட்டடம், தொழிலாளர்கள் குடியிருப்பு ஆகியவை தகர்க்கப்பட்டன.

நேற்று அதிகாலை பக்தாத்தின் ஆறு இடங்களில் அமெரிக்கா குண்டு வீசுத் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதேவேளை, ஈராக்கின் தென்பகுதி நகரான நஜாப் அருகே கூட்டுப் படைகளுக்கும் ஈராக் படைகளுக்கும் இடையே விடிய விடிய கடும் சண்டை நடைபெற்றது. கவச வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் கூட்டுப்படைகள் தாக்குதல்களை நடத்தின.

பஸ்றா நகரத்தின் நதிக்கு வெளியே ஈராக்கின் 14 டாங்கிகளை அமெரிக்கப் படைகள் தாக்கி அழித்தன எனச் செய்திகள் தெரிவித்தன.


**BRIGHTMAN**

பிறவுணர் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

புதிய பிரிவு

சாரமாக உடையாட

சிங்களம்

BY:- வீனாக்கிருஸ்ணன்

ஆரம்பம்:- 30.03.2003

SUN 8.00 a.m. (N.T.)

(16063)


## பிடியாணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன் வழங்குமாறு பொலீஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பலர் வெளியில் நடமாடுவதால் குற்றச் செயல்கள் நடைபெறுவதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருக்கிறது. அதையடுத்தே பொலீஸ்மா அதிபர் இந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறார் என்று பொலீஸ் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## புலிப் போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று கொண்டிருந்த இந்தப் போராளியை கான்ஸ்டபிள் ஒருவர் வழிமறித்துத் தாக்கியதாகவும் - அச்சமயம் மக்கள் அங்கு திரண்டதால் விபரீதங்கள் தவிர்க்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கான்ஸ்டபிள் அடையாளம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்படவிருந்தது. (ஒ-3)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோகிக்கப்பட்டு வருவதையடுத்தே தட்டுப்பாடு நீங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் பாவனையாளர்களுக்கு தேவையான எரிபொருள்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருவதை காண முடிகிறது.

இதேவேளை -

சில எரிபொருள் விற்பனை நிலையங்கள் மாட்டுவண்டில்கள் மூலம் கிராமப்புற மக்களுக்கு தேவையான அளவு மண்எண்ணெயை விநியோகித்து வருகின்றன. (ஐ-17)

## அமெ. எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தாங்கியபடி கோஷங்களை எழுப்பிக் கொண்டு அமெரிக்கத் தூதரகம் நோக்கிப் பேரணி நகர்ந்தது.

பேரணி ஆரம்பமாகி 300 யார் தூரத்தில் வைத்துப் பேரணியைத் தடுத்த பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவிப் பேரணியைக் கலைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் பல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செய்தியாளர்கள் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)


**மாணவரும் உயிரியல் கருத்தரங்கு**

**A/L 2003**

பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்களை உள்ளடக்கியதாக நடைபெறும் இறுதிக் கருத்தரங்கு.

- ✻ பல்தேர்வு வினாக்கள்
- ✻ அமைப்பு கட்டுரை வினாக்கள்
- ✻ கட்டுரை வினாக்கள்

ஆரம்பம்:31.03.2003 திங்கள் 9 a.m.

By : நாகநாதன்

தவறவிட்டால், தவிக்க நேரிடும்.

NEW SCIENCE CENTRE

யாழ்நகர்.

(16033)


## படக்காட்சி

அகதிகள புனர்வாழ்வு நிறுவனத்தின் துணை நிறுவனமான செயல்திறன் அரங்க இயக்கத்தினர் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் பிரதி சனிக்கிழமைகளில் 'தேட்டம்' என்ற பெயரில் நாடக வீடியோ படக்காட்சியை நடத்திவருகின்றனர்.

இந்த வரிசையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு தமிழகக் கவிஞர் இன்குலாப்பின் ஔவை எனும் நாடக வீடியோப் படக்காட்சி இடம்பெறவுள்ளது. (ஒ-3)

## முத்தமிழ் கலையரங்கம்

புதுக்குடியிருப்பு அரசியல் துறையின் ஆதரவுடன் புலிகளின் குரல் வானொலியின் புதுக்குடியிருப்பு பிரதேச வானொலி மன்றம் நடத்தும் மாதாந்த முத்தமிழ் கலையரங்கம் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக பிரபல பாடகர்களான எஸ்.ஜி.சாந்தன், ஜி.சுகுமார் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ஒ)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்29

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம். குணசிங்கத்திற்கு அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் விருது வழங்கியுள்ளது. அதனை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (ம-5)

## பாலா வந்திருந்த வேளை

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவ அணி ஊடுருவவில்லையாம்

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் வன்னிக்கு வருகை தந்த காலத்தில் இராணுவ அணி ஏதும் அங்கு ஊடுருவவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் கடந்த 2ஆம் திகதிமுதல் 16ஆம் திகதிவரை வன்னியில் தங்கியிருந்தனர்.

அந்தக் காலப்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணி ஊடுருவியிருப்பது பற்றி தமக்கு உளவுத்தகவல் கிடைத்ததாக விடுதலைப் புலிகள், கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை மறுத்துச் செய்திக்குறிப்பு ஒன்றை சனத் கருணரத்ன விடுத்துள்ளார்.

புலிகளின் பகுதிக்குள் இராணுவ அணி ஏதும் ஊடுருவவில்லை என்றும் - அச்செய்தியில் உண்மை ஏதும் இல்லை என்றும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி வன்னிக்கு விஜயம் செய்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் டெலிஸன் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்துரையாடினார். இந்த ஊடுருவல் குறித்து அப்போது பிரபாகரன் அவரிடம் முறையிட்டதாகத் தெரியவருகின்றது.

இதைக் கவனத்தில் எடுத்த டெலிஸன் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவிடம் இந்த விடயத்தைப் பிரஸ்தாபித்ததாகவும் தெரியவருகிறது. (ஒ-3)

## புதிய முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை முகாம்களை மாற்றியமைத்து 88 முகாம்களாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றை அமைக்க தனியார் காணிகளைத் தேடினோம். முகாம் அமைக்க வசதியாக காணிகள் கிடைக்காததால், அரச காணிகளை பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

நகரில் சுபாஸ், ஞானம்ஸ் ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள், 80 வீடுகள் ஆகியவற்றைப் பொதுமக்களிடம் கையளிக்க வசதியாக, யாழ். மாநகரசபை, கோட்டை மற்றும் சுற்றாடல், பொலீஸ்நிலையக் காணி, வாடிவீடு, அருகே உள்ள உடைந்த சில வீடுகள் உள்ளடங்கிய பகுதியில முகாம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிப்பகுதியில் மே மாதத்துக்குமுன் முகாம் அமைய ஏற்பாடு செய்யப்படுகின்றது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் தயார் நிலைக் கட்டடத்துக்கான பொருள்கள் மூலம் தற்காலிக கட்டடங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-3)

## றோயல் வெற்றி

சமாதானக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் றோயல் கல்லூரி சம்பியனாகியது. நேற்று நடந்த இறுதிப் போட்டியில் யாழ். சென்.ஜோன்ஸ் அணியை 142 ஓட்டங்களால் றோயல் கல்லூரி அணி வென்றது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானில் கடந்த வாரம் நடந்த 6ஆவது சுற்றுப்பேச்சுக்களின்போது, விடுதலைப் புலிகளின் இந்த அரசியல் விவகாரக்குழு வெளிநாடுகளுக்குச் சென்று சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஆராய்ந்து திரும்பிய பின்னரே, ஆட்சி முறை குறித்து அடுத்த பேச்சுக்களில் ஆராய்வதென முடிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)


**BIT விரிவுரைகள் ஆரம்பம்**

BIT முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான இரண்டாம் அரை ஆண்டுக்குரிய விரிவுரைகள் இன்று 29.03.2003 (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் BIT கற்கை நெறியினை பயின்றுவரும் அனைத்து மாணவர்களும் இதில் இணைந்து கொள்ளலாம்.

இயக்குநர்

IIS, யாழ்ப்பாணம். (16076)



**LIONAIR**

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

பாதுகாப்பான - சௌகரியமான பயணம்

- ★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
- ★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்.

யாழ்ப்பாணம்.

#: 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/27007)



**இந்திய வாஸ்து வல்லுநர் யாழ்.விஜயம்**

(மனைப் பொருத்தம்)

"நாள் செய்வதுபோல் நல்லோர் செய்யார் மனை செய்வது போல் மக்களும் செய்யார்"

நீங்கள் குடியிருக்கும் வீட்டில் பிரச்சினையா?, தொழில் முன்னேற்றம் இல்லையா?, குழந்தை பாக்கியம் இல்லையா?, தீராத வியாதியா?, திருமணத்தடையா?, இவைகள் அனைத்தும் நீங்கள் குடியிருக்கும் வீட்டு அமைப்பு குற்றங்களினால் ஏற்படக்கூடியவை. எனவே, இதை நிவர்த்தி செய்து கொள்ளவும். புதுமனை நிலையம் பார்க்கவும் நீங்கள் அணுகவேண்டிய இடம்.

வாஸ்து வல்லுநர். S.S. யோகராஜ்

C\O, சுவிஸ்ஸோ நகைத்தொழிலகம்,

இல. 44\1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்:- 0777 113868

(16012)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.